

# ஞானச்சுடர்




வெளியீடு:
சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறள் வழி



**நல்லவை யெல்லாஅந் தீயவாம் தீயவும்**
**நல்லவாம் செல்வம் செயற்கு.**


**பொருள் :** தீய ஊழ் உடையவர் பொருளை ஈட்டுவதற்கு நல்ல காரியங்களைச் செய்தாலும் அவை தீமையாக முடியும். நல்ல ஊழ் உடையவர் தீய காரியங்களைச் செய்யினும் பொருள் உண்டாகும். (375)

**பரியினும் ஆகாவாம் பாலல்ல உய்த்துச்**
**சொரியினும் போகா தம.**

**பொருள் :** ஊழால் தம்முடையனவல்லாத பொருள்கள் வருந்திக் காப்பாற்றினாலும் தம்மிடத்தில் நிற்கமாட்டா; ஊழால் தம்முடைய பொருள்களை வெளியே கொண்டுபோய்க் கொட்டினாலும் போகா. (376)

---

# நற்சிந்தனை



*மறப்பேனோ குருநாதன் தன்னை*

**அன்பே வடிவாய் அமைந்த துறவீ**

ஒருமைமனம் படைத்த வுத்தமத் துறவீ!
இருமையு மளிக்கு மிறைவன் திருவடி
அந்தியுஞ் சந்தியு மகலாது போற்றிப்
பந்தித்து நின்ற பாவம் போக்குதி
சிந்தித்துச் சிந்தித்துச் சீவபோத நீக்குதி
நிந்திப் பார்களை நேசத்தால் வெல்லுதி
சந்தேகமில்லை
நீயோ நித்தியன் நினக்கயல் கற்பனை
நீயோ நிராமயன் நினைவொழிந்து வாழுதி 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்




வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலயத்தின் பழைய தேர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர்

வெளியீடு - 3 சுடர் - 310



**2023** **பொருளடக்கம்** **ஐப்பசி**


| | | |
|---|---|---|
| மன இருளைப் போக்கும்... | திருமதி நா. சந்திரலீலா | 01 - 03 |
| தீபாவளி | கு. சோமசுந்தரம் | 04 - 08 |
| தந்தை | திரு குணாளன் | 09 - 10 |
| பகவத்கீதையின் தத்துவம் | பூ. சோதிநாதன் | 11 - 13 |
| சைவ நற்சிந்தனை | இ. சரவணபவன் | 14 - 15 |
| ஆனந்த சாகரம் | திருமதி பா. சிவனேஸ்வரி | 16 - 17 |
| விழிக்குத்துணை | திரு சிவம் | 18 - 19 |
| வழித்துணை | ஆசுகவி செ. சிவசுப்பிரமணியம் | 20 - 21 |
| சிராத்தம் | திரு செவ்வேள் | 22 - 23 |
| அன்பை எங்கு செலுத்துவது | திருமதி ஜெ. இராஜேஸ்வரி | 24 - 25 |
| சிவபெருமானின் திருவந்தாதி | முருகவே பரமநாதன் | 26 - 30 |
| சர்வமும் சர்வ வல்லமைகளும் | இராம. ஜெயபாலன் | 31 - 34 |
| குமரனிடம் அருள்பெற்ற... | திரு சிவபாதம் | 35 - 36 |
| நித்திய அன்னப்பணி | சந்நிதியான் ஆச்சிரமம் | 37 - 39 |
| தமிழ்ப்பெண் கவியரசிகள் | இரா. செல்வவடிவேல் | 40 - 44 |


**வருட சந்தா: 500/= (தபாற் செலவுடன்)**


**சந்நிதியான் ஆச்சிரம**

**சைவ கலை பண்பாட்டுப் பேரவை**

தொலைபேசி இல: 021 321 9599, 021 226 3406

அச்சகம்: சந்நிதியான் ஆச்சிரமம்

Printed & Published By:
Sannithiyan Achchirama Saiva Kalai Panpaddu Peravai.
Selvasannithi, Thondaimanaru.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஞானச்சுடர் புரட்டாதி மாத வெளியீடு

## வெளியீட்டுரையுடன் கூடிய மதிப்பீட்டுரை:

புரட்டாதி மாத ஞானச்சுடர் 309 ஆவது மலருக்குரிய மதிப்பீட்டுரையை சந்நிதியான் ஆச்சிரமத்தோடு நீண்டகால தொடர்பில் உள்ளவரும் பேரவையின் செயற்பாட்டு உறுப்பினராகவும் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் இளைப்பாறிய ஆசிரியராகவும் விளங்கும் திரு துரை. கணேசமூர்த்தி அவர்கள் மலருக்குரிய மதிப்பீட்டுரையை ஆற்றினார்.

அவர் தமது உரையின்மூலம் சந்நிதியான் ஆச்சிரமம் ஆற்றும் பல பணிகளை விதந்துரைத்ததோடு இப் பணிகளை வெற்றிகரமாகவும் வியப்புக்குரியதாகவும், மற்றவர்கள் போற்றும்படியாகவும் செயற்படுத்துவதன் ஊடாக சந்நிதியானது பேரருள் எவ்வளவு தூரம் ஆச்சிரமத்தில் வியாபித்துள்ளது என்பதை நாம் அனைவரும் உணரக்கூடியதாக இருக்கின்றது.

மேலும் மாதாந்த மலராக கடந்த 25 வருடங்களாக ஒரு ஆன்மிக மலர் அதிலும் எந்தவிதமான விளம்பரங்களும் அற்ற நிலையில் மாதம் தவறாது வெளிவந்து கொண்டிருப்பதும் அம் மலரை மாதந்தோறும் சந்தாதாரர்களாக பெற்றுக்கொள்ளும் வாசகர்கள் அளிக்கும் உற்சாகமும் இம் மலர் வெளியீட்டுக்கு ஒரு காரணமாக அமைந்துள்ளது.

இவ்வகையில் இம் மலருக்கு தொடராகவும், தனித்தனியாகவும் ஆக்கங்களை வழங்கிக்கொண்டிருக்கும் அன்பர்களையும் நாம் பாராட்டியே ஆகவேண்டும். ஏனெனில் கட்டுரையின் தரம் மேலோட்டமாக இருந்தாலும், ஆழமாக இருந்தாலும் மனம் தளரா வகையில் மலரில் தத்தமது ஆக்கங்கள் இடம்பெற வேண்டும் என்ற பேரவாவின் மூலம் மலரின் வெளியீட்டை காத்திரமானதாக நடாத்திச் செல்வதற்கு ஒரு உந்துசக்தியாக விளங்குகின்றது என்று கூறி, மலரில் இடம்பெற்ற ஒரு சில ஆக்கங்களின் தன்மைபற்றி சபையில் இருந்த அடியார்களுக்கு விளக்கிக் கூறியதோடு தனது மதிப்பீட்டுரையை நிறைவு செய்தார். இதனைத் தொடர்ந்து சிறப்புப்பிரதி பெறும் நிகழ்வுடன் இனிதே நிறைவடைந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுடர் தரும் தகவல்

மனிதன் தோன்றிய காலம் தொடக்கம் ஏதோ ஒரு வகையில் அறிவு வளர்ந்துகொண்டே இருக்கின்றது என விஞ்ஞான அனுபவம் கூறுகிறது. மனித வளர்ச்சிக்கு கல்வியால் வளரும் அறிவு விருத்தி மிக முக்கியமானது. மனிதன் மனிதனாகவும், மனிதத் தன்மை உள்ளவனாகவும் வாழ வேண்டுமானால் கல்வி வளர்ச்சி மிக முக்கியபங்கு வகிக்கவேண்டும். விஞ்ஞானம் மட்டுமல்ல மெய்ஞானமும் வளரக் கல்வி அவசியமானது.

கல்வி அறிவு வளர்வதால் மத வளர்ச்சி விருத்தி ஆகும். இவ் உலகில் எழுகின்ற பிரச்சினைகளுக்கு கல்வி அறிவு இல்லாமையே காரணமாய் அமைகின்றது. மனிதநேயம் இல்லாத நிலையில் எம்மிடையே பொறாமை, அழுக்காறு, வஞ்சம், சூது என்பன முன்னிலை வகிக்கின்றது. ஒருவன் தன் வாழ்வில் வளர்ச்சி அடைந்துவிட்டால் அவனை எப்படியாவது கீழ்நிலைக்குத் தள்ளிவிடவேண்டும் எனும் முனைப்புத்தான் மேலெழுந்து நிற்கின்றது. எம்மிடையே மனிதநேயம் மலரவில்லை என்றே கூற வேண்டி உள்ளது.

தற்காலத்தில் மனிதன் நவநாகரீகமாக வாழ்கின்றான் என்று நம்புகின்றோம். ஆனால் கடந்த நாற்பது, ஐம்பது ஆண்டுகளுக்கு முன் இருந்த உளத்தூய்மை குன்றிப்போய் இருப்பதை நாம் காணக்கூடியதாக இருக்கின்றது. மேலும் மனிதர்கள் மனிதத் தன்மையிலிருந்தும் மனித நேயத்திலிருந்தும் மாற்றமடைந்து மிருகங்களுடன் கூட ஒப்பிடமுடியாதவர்களாக செயற்பட்டுக் கொண்டிருக்கும் நிலையிலும், மனிதர்களே மனிதாபிமானமற்ற முறையில் மனிதர்களை அழிக்கும் நிலை மேலோங்கி வருவதனை அவதானிக்க முடிகிறது. இத்தகைய செயற்பாடுகளுக்கு அடிப்படைக் கல்வியும் அதன்மூலம் ஏற்படும் அறிவு வளர்ச்சியும் இல்லாமையே காரணமாய் அமைகின்றது.

விஞ்ஞானம் வளர்ச்சி பெற்றிருந்தும் மனிதன் மட்டும் அறிவு பெறுவதில் ஊக்கம் காட்டாது வாழ்தல் மனித இனத்துக்கு வெட்கக்கேடான விடயம். அறிவு என்பதைப் படித்துப் பெறாவிட்டால் அனுபவமூலமாக ஓரளவுதான் பெறமுடியும். எனவே நாம் நல்லோராகத் திகழ்வதற்கு கல்வி அறிவோடு கூடிய அனுபவ அறிவும் ஒவ்வொருவரிடமும் இருக்கவேண்டும். இதனைக் கடைப்பிடித்து வாழ்ந்தால் மனிதம் வளரும். தற்காலத்தில் நாட்டில் இடம்பெறும் பல அராஜகச் செயல்களுக்கு மனிதமும், மனித நேயமும் இல்லாமையே காரணம். இதனை நன்குணர்ந்து நடந்தால் வீட்டிலும் நாட்டிலும் அமைதி பிறக்கும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வச்சந்நிதி வேல் முருகன் துணை

ஓம் சரவணபவாய நம ஓம் நமஹ!

## சந்நிதியான் ஆச்சிரமம் (மோகன்சுவாமி மடம்)
## வாழ்த்துப்பா

**பன்னிருசீர் விருத்தம்**

அடியவர்கள் பசிப்பிணியை அகற்றுவதற்கு
அமைந்தமட ஆலயங்கள் அதிகமிங்கே
அதிலொன்றே சந்நிதியா னாச்சிரமம்
அதுஎன்றும் நற்பணியைத் தொடர்கநன்றாய்
கடியபணி யிதுஇலகு வானதல்ல
காண்பவர்க்கு தெரியுமிதன் சிரமம் என்றும்
கந்தனருள் அடியவர்கள் பசிதீர்ந்தேகல்
கடமையென அப்பணியைச் செய்வோர் வாழ்க!
வடிவேல னருளாசி யிவர்கட்குண்டு
வழிவழியா யிப்பணியுந் தொடரவேண்டும்
வருந்தொண்டர் பசியாறி மகிழவேண்டும்
வள்ளிமண வாளனருள் புரிவா னென்றும்
அடியேனை வாழ்த்திடவே வைத்தானந்த
ஆறுமுகன் கருணையதை என்னென்பேன் நான்
அகமகிழ்ந்து கூறுகிறேன் ஆசிவாழ்த்தே
அவனருளே யல்லாது வேறொன்றுண்டோ?

மோகன்மடம் சமயப்பணி செய்து வாழ்க!
மென்மேலு மங்கவர்க்குப் பொருளையீந்து
முட்டின்றி யிப்பணியைச் செய்வதற்கு
முன்வருக வள்ளல்பெரு மக்களிங்கே
பாகனுமை பங்கனருட் குமரனையன்
பன்னிருகை வேலவனி னடியாரிங்கே
பசிப்பிணிநோய் தீர்ந்தேக வேண்டுமென்றே
பணிபுரிவோ ரனைவருமே வாழ்க! வாழ்க!
ஏகனனே கன்பெருமான் சிவனின் நல்ல
அடியவர்கள் முருகனடி யவரேயன்றோ
என்றடியார்க் கமுதளிப்போ ரினிது வாழ்க!
எம்பெருமான் சிவனவனே முருகனென்று
ஆகமவே தம்மறிந்தோ ருரைப்பதுண்டு
அவ்வகையில் முருகனையே வணங்கினாலும்
அதுசிவனின் வணக்கமென ஆகுமன்றோ?
ஆதலின் முருகனையும் வணங்குவோமே!

-ஆ. விநாயகமூர்த்தி-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐப்பசிமாத சிறப்புப்பிரதி பெறுவோர் விபரம்

**A. சண்முகராஜா**
(லண்டன்)

**M. சதாசிவமூர்த்தி**
(கனடா)

**சி. மகேஸ்வரன்**
(பிரதிக் கல்விப்பணிப்பாளர், புத்தூர்)

**செ. ஞானசபேசன்**
(கிராம அலுவலர், ஏழாலை)

**சி. உதயகுமார்**
(கிராம அலுவலர், கைதடி)

**தலைவர்**
(ப.நோ.கூ. சங்கம், கட்டைவேலி)

**தி. இரவீந்திரநாதன்**
(அதிபர், கலைமணி வீதி, கட்டைப்பிராய்)

**திருமதி கமலாம்பிகை ஸ்ரீஸ்கந்தராசா**
(சுண்ணாகம்)

**ம. குகதாசன்**
(வரணி)

**K. சீவரெட்ணம்**
(யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**
(நந்தினி என்ரபிரஸ், யாழ்ப்பாணம்)

**செ. ரவிசாந்**
(குப்பிளான்)

**S. தங்கசிவம்**
(யாழ்ப்பாணம்)

**சி. சேது**
(அச்சுவேலி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**S. செல்வராசா (செல்வி)**
(சேவிஸ் ஸ்ரேஷன், புலோலி)

**மு. அப்புலிங்கம்**
(கோண்டாவில் கிழக்கு)

**திருமதி ப. சொக்கநாதன்**
(கொக்குவில்)

**ந. சிவக்குமார்**
(ராஜன் எலக்ரோணிக், அச்சுவேலி)

**திருமதி சசிலேகா ஜெயராஜன்**
(ஆசிரியர், தோப்பு, அச்சுவேலி)

**ப. தியாகராஜசர்மா**
(திருமகள் வாசா, ஆவரங்கால்)

**மகாலிங்கம் செல்வமணி**
(ஊரெழு மேற்கு, சுன்னாகம்)

**K. முகுந்தன்**
(ஞானபண்டிதர் பாடசாலை அருகில், கொக்குவில்)

**நா. நாகராசா**
(பக்கிஸ்லேன், மானிப்பாய்)

**ந. மணிவண்ணன்**
(இரும்புமதவடி, வதிரி)

**இராதாகிருஷ்ணன் கிரிதரன்**
(தம்பலடி, பொலிகண்டி)

**ஆ. யோகதாசன்**
(பூதவராயர் கோவிலடி, உரும்பராய்)

**நவரத்தினம் இந்திரமோகன்**
(சண்டிலிப்பாய் மேற்கு)

**திருமதி சிவநிதி முருகானந்தன்**
(கட்டுடை, மானிப்பாய்)

**இராசரத்தினம் வேல்குமார்**
(இணுவில்வீதி, மானிப்பாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**சபாநாதன் தனேஷன்**
(யாழ்வீதி, மானிப்பாய்)
**M. செந்தூரன்**
(வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்)
**க. முருகானந்தம்**
(காளிகோவிலடி, மல்லாகம்)
**த. சொக்கலிங்கம்**
(இணுவில் தென்மேற்கு)
**பா. சியாமளநாயகி**
(சுண்ணாகம் கிழக்கு)
**கிட்டிணன் ஜெயக்குமார்**
(சிவன்வீதி, சிறுப்பிட்டி மேற்கு)
**கு. ஜெகதீஸ்வரன்**
(இராசவீதி, கோப்பாய் வடக்கு)
**கி. ஜெயக்குமரபதி**
(இடைக்காடு, அச்சுவேலி)
**க. துரைராசா**
(சுதுமலை தெற்கு)
**அருச்சுனன் சுனோஜா**
(தும்பளை தெற்கு)
**சி. புஸ்பரதி**
(கரணவாய் மத்தி)
**இ. சிவபாதம்**
(நீலமயில் வாசா, அல்வாய்)
**கனகன் சின்னத்தம்பி**
(சிறுப்பிட்டி மேற்கு, நீர்வேலி)
**வே. முருகவேள்**
(நெடியகாடு, வல்வெட்டித்துறை)
**க. சத்தியதாஸ்**
(வில்லிசைக் கலைஞர், சிறுப்பிட்டி)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வ. இராசநாயகம்**

(கவிதா பொடி பில்லேர்ஸ், கரவெட்டி)

**ரூபினி வசந்தகுமார்**

(யாழ்ப்பாணம்)

**உரிமையாளர்**

(ஸ்ரீதேவி தொலைத்தொடர்பகம், அச்சுவேலி)

**விக்னேஸ்வரி கணேசநாதன்**

(நீர்வேலி)

**சி. பத்மராசா**

(நவிண்டில், கரணவாய்)

**T.R. இரத்தினவேல்**

(அரசவீதி, உரும்பராய்)

**A. முரளிகரன்**

(ஊரெழு)

**பா. இந்துராணி**

(மல்ரி ஓயில், இணுவில்)

**சு. சுந்தரலிங்கம்**

(வேவில் லேன், வல்வெட்டி)

**வீ. வடிவேலு**

(தும்பளை தெற்கு, பருத்தித்துறை)

**Dr தர்மலிங்கம்**

(நீர்வேலி)

**சிவலிங்கம் சுகந்திகா**

(ஆதியாமலை, உடுப்பிட்டி)

**த. கனகம்**

(பன்னாலை, நீர்வேலி வடக்கு)

**நாகமுத்து செல்வராசா**

(மானிப்பாய்)

**செ. இராசநாயகம்**

(அல்வாய்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மன இருளைப் போக்கும் திருக்கார்த்திகை தீபம்

– திருமதி சந்திரலீலா நாகராசா அவர்கள் –

கார்த்திகை மாதம் கார்த்திகை நட்சத்திரத்தன்று முருகனுக்கு அனுஷ்டிக்கும் விரதம் திருக்கார்த்திகையாகும். இந்நாளில் ஆலயங்களிலும் வீடுகளிலும் விளக்கீடு மூலம் பலவிதமான தீபங்களை ஏற்றி வழிபடுகிறார்கள். இறைவனுக்குரிய கிரியை வழிபாட்டில் விளக்கேற்றுதலும் அடங்கும். எல்லோரும் அறிந்த புராணக்கதையில் பிரம்மாவும் விஷ்ணுவும் தானே பெரியவன் பெரியவன் என்ற அகங்காரத்தைப் போக்கி சிவபெருமான் சோதி வடிவாக அடி, முடி காணாதவாறு பரப்பிரம்மமாக காட்சியளித்த நாளே திருக்கார்த்திகையன்றேயாகும். இதைக் குறிக்கும் முகமாகவே தீபம் ஏற்றி வந்தனை செய்யப்படுகிறது. இதனால் பக்தர்களுக்கு சகல சௌபாக்கியங்களும் கிடைக்கும். இறைவன் ஐம்பூதங்களிலும் நீக்கமற நிறைந்துள்ளான்.

கார்த்திகை மாதம் மங்களகரமானது. எம்மிடமுள்ள அஞ்ஞான இருள் அகன்று ஞானமாகிய ஒளி மிளிர்வதற்காக தீபமேற்றுகிறோம். இருளை நீக்கி ஒளியை நல்குவதை திருமூலர் இப்பாடலில் காட்டுகிறார்.

விளக்கினை ஏற்றி வெளியை அறிமின்
விளக்கினின் முன்னே வேதனை மாலும்
விளக்கை விளக்கும் விளக்குடையார்கள்
விளக்கில் விளங்கும் விளக்கவர் தாமே.

அதாவது திருவருள் ஞானமாகிய விளக்கினை ஏற்றி வெளியாகிய பரம்பொருளை உணர்வீர். ஒளியின் முன்பு உயிரைப் பற்றிய மும்மலங்களும் நீங்கும். அருள் ஒளியைப் பெற்றவர்கள் ஞானச்சுடர் விளக்காகத் திகழ்வார்கள் என்பது கருத்து.

சூரனை சங்காரஞ் செய்ய சிவபெருமானின் ஆறு முகங்களான ஈசானம், தற்புருடம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் மற்றும் அதோ முகத்திலுதித்த ஆறு குழந்தைகளைச் சரவணப் பொய்கையில் வளர்த்த கார்த்திகைப் பெண்களின் தொண்டைப் பாராட்டி முருகன் கோவில்களில் விளக்கீடு குமாராலய தீபமாக ஏற்றப்படுகிறது. முருகனுக்கு கார்த்திகேயன் என்னும் நாமமும் உண்டாயிற்று. சர்வாலய தீபமன்று வீடுகளிலும் அகல்விளக்கு, சிட்டி விளக்கு, குத்துவிளக்கு, பந்தங்கள் மூலம் தீபம் ஏற்றி வழிபடுவார்கள். விஷ்ணு ஆலய தீபத்தன்று விஷ்ணு ஆலயங்களிலும் விசேட பூசையும் தீபம் ஏற்றியும் வணங்குவர். ஆலயங்களில் பனை ஓலைகளால் மூடி மறைத்து சொக்கப்பானை கொழுத்துவது வழமையான செயல். கருவறையிலிருந்து பெரிய தினை மாவால் செய்யப்பட்ட விளக்கை உள்ளே எரிப்பர். சுவாமி வெளிவீதி உலா வருவார்.

அணையப்போகும் விளக்கின் திரியை எலியொன்று தூண்டி பிரகாசமடையச் செய்ததால் மறுபிறவியில் மகாபலிச்சக்கரவர்த்தியாகப் பிறந்து திருமாலுக்கு (வாமணன்) மூன்று அடி மண் தானம் கொடுத்து, நிலவுலகையும், வானுலகையும் அளந்த பெருமான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூன்றாவது அடியை பலியின் சிரசில் வைத்து பாதாள உலகை ஆளவிட்டார். கார்த்திகை பௌர்ணமியன்று தாருகாசுரனின் மூன்று புதல்வர்களான கமலாட்சன், தாரகாட்சன், வித்யுன்மாலியை பொன், வெள்ளி, இரும்பு கோட்டையுள் வைத்து தன் புன்சிரிப்பால் சாம்பலாக்கியவர் சிவபெருமான். திருமந்திரத்தில் உள்ள பாடல் வருமாறு.

அப்பணி செஞ்சடை ஆதி புராதனன்
முப்புரம் செற்றனன் என்பர்கள் மூடர்கள்
முப்புர மாவது மும்மல காரியம்
அப்புரம் எய்தமை யாரறி வாரே.

இச் செயலைக் குறிக்கும் தலம் திருவதிகை வீரட்டானமே. மூன்று கோட்டைகளும் முறையே ஆணவம், கன்மம், மாயை ஆகிய மூன்று மலங்களையும் அழித்து அருள்வான் என்பதை உணர்த்துகிறது.

திரிசங்கு மன்னன் தான் இழந்த நாட்டை கார்த்திகை தீப விரதமிருந்து பெற்றான். இந்நாளிலேயே பகீரதனும் தனது நாட்டைப் பெற்றான்.

திருமாளிகைத்தேவர் அருளிய திருவிசைப்பாவில் "ஒளிவளர் விளக்கே உலப்பிலா வொன்றே" என்று மனதாரப் பாடினார். மாணிக்கவாசகர் பாடிய அருட்பத்தில் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" எனச் சிவனை சுடராயும், சோதியாயும் விளம்பினார். அருட் பெருஞ்சோதி, தனிப்பெருங் கருணையாகிய இராமலிங்க சுவாமி என்னும் வள்ளலார் சிவன் ஒளி வடிவானவர் எனக் கருதி ஒளியையே தியானித்து சோதியில் ஐக்கியமானார். திருநாவுக்கரசு நாயனார் திருவையாற்றில் இருந்தபோது பாடிய திருத்தாண்டகத்தில் இறைவனைப் பலவிதத்திலும் ஏற்றி ஒளி வடிவானவன் என்று துதிப்பதைக் கீழே காணலாம்.

ஓசை ஒலியெலாம் ஆனாய் நீயே
உலகுக்கு ஒருவனாய் நின்றாய் நீயே
வாச மலரெலாம் ஆனாய் நீயே
மலையான் மருகனாய் நின்றாய் நீயே
பேசப் பெரிதும் இனியாய் நீயே
பிரானாய் அடியென்மேல் வைத்தாய் நீயே
தேச விளக்கெலாம் ஆனாய் நீயே
திருவையாறு அகலாத செம்பொற் சோதி.

நினைத்தாலே முக்தி தரும் பஞ்சபூத தலங்களில் தேயுவாக (அக்னி) வழிபடப்படும் திருவண்ணாமலைத் திருத்தலத்தில் ஏற்றப்படும் மகா கார்த்திகைத் தீபத்தை தரிசிப்பதற்கும் கிரிவலம் வருவதற்கும் பூர்வ புண்ணிய பலன் வேண்டும். பல்லாயிரக்கணக்கான அடியார்கள் தீபத்தைத் தரிசித்து பாவங்களைப் போக்கி பரிசுத்தமடைவர்.

ஒவ்வொரு ஆண்டும் பத்து நாள் திருவிழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டு பரணி தீபமும், பின்பு திருக்கார்த்திகை தீபமும் மலையுச்சியில் ஏற்றப்படும். பெரிய செப்பு கொப்பரையில் கீலோக் கணக்கில் நெய்யூற்றி சேலையைத் திரியாக்கி ஏற்றுவர். அத் தீபம் தெரிந்த பின்பே வீடுகளில் தீபம் ஏற்றுவர். அண்ணாமலையான் சமேத உண்ணாமுலை அம்மனைத் தொழுபவர்களின் வினைகள் நீங்கிவிடுமென தோணியப்பரான சம்பந்தர் பாடினார்.

*தளராத இதயம் உள்ளவனுக்கு இவ்வுலகில் முடியாதது என்று எதுவும் இல்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாமுலை யுமையாளொடு முடனாகிய ஒருவன்
பெண்ணாகிய பெருமான் மலை திருமா மணித்திகழ
மண்ணார்ந்தன அருவித்திரண் மழலை முழவதிரும்
அண்ணாமலை தொழுவார் வினை வழுவா வண்ணமறுமே.

திருவண்ணாமலைத் தீப தரிசனத்தைக் காண இரண்டு கண்களும் போதாது. பகவான் ரமண மகரிஷியும் திருவண்ணாமலைக் குகையில் ஞானத் தவமியற்றி ஈசனை வழிபட்டு சமாதியடைந்தார். திருவண்ணாமலை உச்சியில் தீப வழிபாடு நடப்பதை பின்வரும் பாடலில் காணலாம்.

கங்கையணி தீபம் கற்பூர தீபமாலை
மங்கையொரு பங்கில் வளர் தீபம்
பங்கையன் மால் விண்டாடு நேடும் வரை
மேவிய அண்ணா மலையில்
பண்பாடும் கார்த்திகை தீபம்.

திருவண்ணாமலை, அருணாசலம், அருணகிரி, சித்தர்மலை, சிவமலை ஆகிய பல பெயர்களிலும் அழைக்கப்படுகிறது. திருமயிலாப்பூரிலுள்ள கபாலீச்சுரரையும், கற்பகவல்லியையும் வணங்கிய சம்பந்தர் பூம்பாவையின் எலும்புள்ள குடத்தையும் வாங்கி பூம்பாவை என விளித்து

மண்ணிற் பிறந்தார் பெறும் பயன் மதிசூடும்
அண்ணலார் அடியார் தமை அமுது செய்வித்தல்
கண்ணிலால் அவர் நல்விழாப் பொலிவு கண்டார்தல்
உண்மையெனில் உலகர் முன் வருக எனவுரைப்பார்.

தொடர்ந்து

மட்டிட்ட புன்னையங் கானன் மடமயிலைக்
கட்டிட்டங் கொண்டான் கபாலீச்சரமமர்ந்தார்
ஒட்டிட்ட பண்பின் உருத்திர பல்கணத்தார்க்
கட்டிட்டல் காணாதே போதியோ பூம்பாவாய்

இப் பாடலைப் பாடியதும் பூம்பாவை உருவம் பெற்றாள். தொடர்ந்து எட்டுப் பாடல் பாட பன்னிரண்டு வயதாக வளர்ந்தாள். விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய் பாடி முடிய பூம்பாவை குடத்திநின்று அழகாகத் தோன்றினாள்.

மங்களகரமான இக் கார்த்திகை மாதத்தில் நாமும் எமது பாவ வினைகள் இல்லாது போக, புற இருளைப் போக்குவது மட்டுமல்லாது எம்முள்ளிருக்கும் அஞ்ஞானம் என்னும் அக இருளைப் போக்க திருக் கார்த்திகை தீபத்தை ஏற்றி வழிபட்டு உய்வோமாக. அவனருளைப் பெறுவோமே.

விளக் கொளியாகிய மின் கொடியாளை
விளக் கொளியாக விளக்கிடு நீயே
விளக்கிடு மெய்நின்ற நாணப் பொருளை
விளக் கிடுவார்கள் விக்கினர் தானே.

அண்ணாமலையானுக்கு அரோகரா!

*வெற்றி என்பது புத்திசாலிகளுக்கு மட்டுமல்ல. முன்னேறத் துடிக்கும் அனைவருக்குமே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீபாவளி

(தொடர்ச்சி...

– **கலாநிதி குமாரசாமி சோமசுந்தரம்** அவர்கள் –

**நரகாசுர சங்காரம்**

நரகாசுரன், அசுரகுலத்தில் அரச வம்சத்தில் தோன்றியவன். கடுந் தவம் புரிந்தும் யாகம் செய்தும் இறைவனிடம் வரங்கள் பல பெற்றவன். வரங்கள் அவனுக்கு வல்லமைகளை வழங்கின. போர் செய்து, எந்தப் பராக்கிரமசாலியாலும் வெற்றிகொள்ள முடியாமல் போய்விட்டது. அவனின் அதீத வல்லமைகள் அவனுக்குப் போர்களில் வெற்றிகளை அளித்தன.

ஆணவத்தையும் அதன் வழிவந்த அகங்காரம், மமகாரம் ஆகியவற்றையும் தாராளமயமாக்கின. அகங்காரம் என்பது "நான்", "எனது" எனும் தற்பற்று. மமகாரம் என்பது பொருட்பற்று. அவற்றை முறையே அகந்தை, மமதை என்றும் கூறுவர்.

ஆணவமுனைப்பின் மேலாதிக்கத்தின் உந்துதலால் நல்லவர்கள் பலரைப் பிடித்து சிறையில் வைத்தான். சித்திரவதைகள் செய்தான். இல்லங்களிலும் விளக்குகள் ஏற்றப்படக் கூடாது என்று கண்டிப்பான உத்தரவு பிறப்பித்தான். எங்கும் ஒரே காரிருள் காணப்பட்டன. பஞ்சமா பாதகங்களும் அங்கிங்கெணாதபடி எங்கும் நடைபெற்றன. எங்கும் மரண ஓலங்கள், அவலங்கள், அனர்த்தங்கள் தலைவிரித்தாடின. வரங்கள் வழங்கிய கடவுளையும் மறந்தான். "நானே பரப்பிரம்மம்; எனக்குமேல் வேறொரு கடவுள் இல்லை" என்று ஆர்ப்பரித்தான்.

ஆலயங்களில் பூசை, ஆராதனைகள், தீபங்கள் ஏற்றுதல் மற்றும் நைமித்தியப் பூசை வழிபாடுகள், திருவிழாக்கள் யாவும் இடம்பெறக்கூடாதெனக் கண்டிப்பான உத்தரவு போட்டான். கட்டளைகளை மீறுவோர்மீது கடுமையான நடவடிக்கைகள் எடுத்தான். "கொடுங்கோல் மன்னன் வாழும் நாட்டில்; கடும் புலி வாழும் காடு நன்றே" என்னும் முதுமொழி மெய்ப்பிக்கப்பட்டது.

வீடுகளிலும் விளக்கேற்றுதல் தடைசெய்யப்பட்டது. தடைகளை மீறுவோரைச் சிறையில் அடைத்து சித்திரவதைகளுக்கு உட்படுத்தினான். எங்கும் ஒரே காரிருள் மயம். மக்கள் எவ்வளவு காலந்தான் பொறுத்துக்கொள்வார்கள். ஈற்றில் மானசீகமாக; எல்லாம்வல்ல, எங்கும் நிறைந்த, எல்லாம் அறிந்த இறைவனிடம் முறையிட்டனர். நரகாசுரனின் கொடுங்கோலாட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்கவும் மக்களைப் பாதுகாக்கவும் இறைவன் திருவுளங் கொண்டார்.

விஷ்ணுமூர்த்தி துவாரகாபுரியில் கிருஷ்ணவதாரம் எடுத்த காலம் அதுவாகும். அவதார நோக்கம் "துஷ்டநிக்கிரகம், சிஷ்ட பரிபாலனம்" ஆகும். கொடுங்கோலன் நரகாசுரனை அழிக்கவும், மக்களின் தாங்கொணாத் துன்பங்களை நீக்கவும் அவதாரத்தின் பிரதான நோக்கம் ஆகும்.

நரகாசுரன் பூமாதேவியின் மைந்தன். அவன் தவம் செய்து பெற்ற வரத்தின்படி; அவனைப் பகல் நேரத்திலோ, இரவு நேரத்திலோ கொல்லமுடியாது. அவன் மாயங்கள் செய்வதிலும் வல்லவன். இந்நிலையில், கிருஷ்ணபகவான்; பகலும் இரவுமற்ற ஓர் இடை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரத்தில்; விடிய ஐந்து நாழிகைக்கு முன்னர் அதாவது அதிகாலையில் நரகாசுர சங்காரம் நடத்தியருளினார்.

நரகாசுரன், உயிர் பிரியும்வேளை உண்மையை உணர்ந்தான். தான் பழி பாவங் களுக்கு விமோசனம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் ஒரு நல்ல காரியத்தை செய்ய விரும்பி கிருஷ்ண பகவானிடம் வரம் ஒன்று கேட்டான். வரம் பின்வருமாறு அமைகின்றது.

"பகவானே! நான் மரணிக்கும் இத்தினத்திலே ஆண்டுதோறும் விடிய ஐந்து நாழிகைக்கு முன்னதாக அதிகாலையில் நித்திரை விட்டெழுந்து தலையில் எள்ளெண்ணை தேய்த்து, அரப்பினால் அழுக்குகளை அகற்றி, தலைமுழுகிப், புறத்தூய்மையராய் அதேவேளை மனத்திலுள்ள அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் ஆகியவற்றையும் நீக்கி, அகத்தூய்மையராய் இறைவனை வணங்கி வழிபாடு செய்யவேண்டும்" என வரம் கேட்டான். கிருஷ்ண பகவானால் அந்த வரமும் வழங்கப்பட்டது. பெருமகிழ்ச்சியுடன் நரகாசுரன் உயிர் நீத்தான்.

அதேவேளை நரகாசுரனின் அன்னையாகிய பூமிதேவியும், கிருஷ்ண பகவானிடம் வரம் ஒன்று கேட்டுப் பெற்றாள். வரம் பின்வருமாறு. தனது மகன் மரணித்த இத் தினத்தை நினைவுகூரும் முகமாக ஆண்டுதோறும் மக்கள் ஆயிரம் சுடர் ஒளி விளக்குகள் ஏற்றவேண்டும். காரிருள் களையப்பெற்று, பூமி எங்கணும் ஒளிமயமாகக் காணும் அற்புதக் காட்சியைக் கண்டு அகமகிழ வேண்டும். அவர்களின் எதிர்காலம் ஒளிமயமானதாக விளங்கும் என்ற நம்பிக்கை ஒளி உதயமாகவேண்டும். அவ்வாறு மகன் செய்த அதி பாதகங்களுக்குப் பாவ விமோசனம் வேண்டி பகவானிடம் இரந்து கையேந்தி நின்றாள் பூமாதேவி கேட்ட வரமும் வழங்கப்பட்டது. அவ்வாறு தொடங்கப்பெற்ற தீபாவளி ஒளிவிழா இன்றும் பெரும் பண்டிகையாக, பெரும் விழாவாக இந்துக்களால் கொண்டாடப்பட்டு வருகிறது.

"புறந்தூய்மை நீரால் அமையும், அகந்தூய்மை
வாய்மையால் காணப்படும்"

என்கிறது தமிழ்மறை எனப் போற்றப்படும் திருக்குறள் நூல். மனிதர்கள் உள்ளங்களிலும் புறத்திலும் சுற்றுப் புறங்களிலும் தூய்மைபேணிவரவேண்டியது மிக அவசியம். அதேவேளை; அகந்தூய்மை- மனந்தூய்மை- மனச்சுத்தம், உட்சுத்தம் மனிதனின் நோயற்ற வாழ்வுக்கு இன்றியமையாதன.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்" என்பது ஆன்றோர் அருள்வாக்கு.

தீபாவளிக் கொண்டாட்டத்தின் முதன்மை நோக்கம் மனந்தூய்மை பேணுதல்; புறந்தூய்மை பேணுதல் (உடல் தூய்மை, சுற்றுப்புறச்சூழல் மற்றும் வாழ்விடம் தூய்மை) என்பனவாகும். புறந்தூய்மை பற்றி ஏற்கனவே விளக்கம் தரப்பட்டுள்ளது. இனி அகந்தூய்மை பேணும் முறைபற்றிப் பார்ப்போம். நல்ல எண்ணங்கள், நற்சிந்தனைகள், நல்ல உணர்வுகள் என்பவற்றை நல்லெண்ணெயாகவும், அரப்பாகவும் கொண்டு, அகத்திலே தேங்கி உறைந்துள்ள பேராசை, கடும்பற்று, சினம், உயர்புகழ் பற்று, தற்பற்று, பொருட்பற்று மற்றும் பதவி அந்தஸ்துப்பற்று, பொறாமை, எரிச்சல், உயர்வு தாழ்வு மனப்பான்மை, முறையற்ற எதிர்ப்பால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவர்ச்சி - காமம், வஞ்சம்; தன்முனைப்பு, அகங்காரம், மமகாரம் செருக்கு, அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல், வன்முறைகள், வெறுப்பு ஆகிய மன அழுக்குகளை நன்றாகத் தேய்த்தும், உரஞ்சியும் கழுவி நீக்குதல் வேண்டும். துப்புரவு செய்தல் வேண்டும். அதனால் மனந்தூய்மை பேணப்படுகிறது. "மனமது செவ்வையானால் மந்திரம் தேவையில்லை" என்பது முதுமொழி. அத்துடன் மருந்தும் தேவையில்லை, யந்திரமும் தந்திரமும் தேவையில்லை. மனம்தான் நல்லவை தோன்றுவதற்கும் கெட்டவை தோன்றுவதற்கும் முதற்காரணம்; உற்பத்திஸ்தானம். எனவே மனத்தைத் தூய்மையாக, அழுக்குகளை நீக்கியும் தோன்றாமல் தவிர்த்தும், எப்பொழுதும் வைத்திருந்தால் அதாவது மனந்தூய்மை நன்கு பேணப்பட்டு வந்தால்; மனித வாழ்வு சுகம் தரும்; நலம் தரும்; இதமாகவும் இன்பமாகவும் இருக்கும். "இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை" என்னும் வாழ்வின் குறிக்கோள் எய்தப்பட்டுவிடும்.

இயல்பாகவே ஆறாம் அறிவு ஆகிய பகுத்து அறியும் திறனையும் பிரித்துணரும் ஆற்றலையும் பிறப்புரிமையாக, வரித்துக்கொண்டவர்கள் மனிதர்கள். அவற்றை நன்கு அன்றாட வாழ்வில் கடைப்பிடித்து, மனந்தூய்மை, வாக்கில் தூய்மை, செயலில் தூய்மை பேணி வந்தால்; வாழ்வு நலம்பெறும். இதம்பெறும். இன்பமே எந்நாளும் துன்பம் இல்லை என்ற அதி உயர்நிலையை அடைய இயலும்.

மனிதர்களோடு ஒட்டிக்கொண்டுவிட்ட மது மற்றும் போதைப்பொருட் பாவனை, புகைத்தல் முதலிய கெட்ட பழக்கங்கள் அறவே ஒழிக்க வேண்டும். அவை மனிதகுலத்தை அழிக்க உருவெடுத்து வந்த நரகாசுரன் போன்ற அசுரர்கள். மனிதர்கள் தங்களின் பகுத்துணரும் திறனைப் பயன்படுத்தி அசுரர்களை அழித்து ஒழிக்க வேண்டும். தவறினால் மனிதகுலம் முற்றிலுமாக அழிக்கப்பட்டுவிடும். இதனை ஒரு தீபாவளி சங்கற்பமாகச் சத்தியவாக்கு எடுத்து, இந்த முறை வரும் தீபாவளி தொடக்கம் அதனை நிறைவேற்ற வேண்டும்.

இன்றைய செய்தித்தாள்களில் இளம் வாலிபர்கள் மற்றும் பாடசாலை, கல்லூரி மாணவர்கள் சிலர் போதைப்பொருட்களுடன்; கல்லூரிகளின் அண்மித்த பகுதிகளில் காணப்பட்டதாகவும், விற்பனை செய்பவர்கள், பாவனையாளர்கள் பொலிசாரால் கைது செய்யப்பட்டதாகவும், பரபரப்பான செய்திகள் வெளிவந்திருப்பதைக் காணலாம். இது நல்ல அறிகுறி அல்ல. அதனை முளையிலேயே கிள்ளி எறியாவிட்டால் மனிதகுலம் தப்பிப்பிழைப்பது அத்துணை எளிதன்று. நாம் வாழுகின்ற யுகம் கலியுகம் என்ற பெயரைக் கொண்டது. "யானை வரும் பின்னே, மணியோசை வரும் முன்னே" என்னும் முதுமொழி பொருள் நிறைந்தது. கலி அதன் தீய குணங்களை வெளிப்படுத்தத் தொடங்கிவிட்டது.

உடல்பலம், செல்வபலம், அதிகாரபலம், கல்விச்செருக்கு என்பன அளவுக்கு விஞ்சிச் சேரும்போது ஆன்மீகம், கடவுள் பற்று, மனிதம், மனிதாபிமானம் என்பன தூர விலகி நிற்கும்.

"மனிதனில் ஆழ்ந்து கிடக்கும் பரிபூரணத்துவத்தை வெளிப்படுத்துவது கல்வி"

-சுவாமி விவேகானந்தர்.

"மனிதரில் உள்ளார்ந்திருக்கும் தெய்வீகத்தை வெளிப்படுத்துவது சமயம்"

-சுவாமி விவேகானந்தர்.

*வெற்றி வந்தால் பணிவு அவசியம். தோல்வி வந்தால் பொறுமை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளைகள் பழக்கவழக்கங்கள், நடத்தைகள், குணநலன்கள், நல்லது கெட்டது விளைவுகள் ஆகியவற்றை ஏற்கனவே தெரிந்துகொண்டு பிறக்கவில்லை. குழந்தைகளை நல்லவர்கள் ஆக்குவதும் கெட்டவர்கள் ஆக்குவதும்; பெற்றோர், ஆசிரியர்கள், வாழும் சமூகத்தினர், நண்பர்கள், உடன்பிறந்தோர், குடும்பத்தவர் ஆகியோரின் கைகளில் அதாவது நடத்தைகளில்தான் பெரிதும் தங்கியுள்ளது.

"எந்தக் குழந்தையும் நல்ல குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே; அவன் நல்லவன் ஆவதும் கெட்டவன் ஆவதும் அன்னை வளர்ப்பினிலே"

மனிதனோடு ஒட்டி உறவாடிக்கொண்டு வருகின்ற மது, போதைப்பொருட் பாவனை, புகைத்தல் முதலிய தீய பழக்கங்கள் ஒட்டுமொத்தமாக நீக்கப்பட்டுவிட வேண்டும். தெய்வத்தின் சந்நிதியில் சத்தியவாக்கு ஒப்புக்கொடுக்க வேண்டும். மீறினால் தெய்வ தண்டனைக்கு உள்ளாக நேரிடும்.

நரகாசுர சங்காரம் என்பது தீமைகள், தொல்லைகள், வன்முறைகள், கொடுமைகள் ஒழிப்பு ஆகும். உடற்பலம், செல்வபலம், கல்விபலம் என்பன அளவுக்கு தேவைக்கு விஞ்சியதாகச் சேரும்போது ஆன்மீகம், மனிதம், மனிதாபிமானம், மனிதத்துவம், மனச்சாட்சி என்பன வெகுதூரம் மனிதரைவிட்டு விலகிப்போய்விடும். அப்போது ஆறறிவு படைத்த மனிதன்; ஐயறிவு படைத்த கொடிய மிருகமாகி விடுகின்றான். முன் யோசனையின்றி, பின்வரும் காரியங்கள் பற்றியும் பின் விளைவுகள் பற்றியும் முன்கூட்டியே சிந்தித்துச் செயற்படாமல் மனம்போன போக்கில் செயல்களையாற்றுபவர்கள். நரகாசுரன், இராவணன், கம்சன், சிசுபாலன், இரணியன், சூரபத்மன், மகுடாசுரன் ஆகியோர் இதற்கு உதாரண புருடர்கள் ஆவர். இன்று நாம் வாழும் யுகம் கலியுகம். அதுவும் கலி முற்றி ஐயாயிரம் ஆண்டுகள் கடந்துவிட்டன. இனி வன்முறைகள், கொடுஞ்செயல்கள் கங்குகரையின்றி நடைபெற்றால் ஆச்சரியப்படுவதற்கு இல்லை. இறைவன்தான் பாதுகாக்க வேண்டும். எல்லோருமாகச் சேர்ந்து கூட்டு வழிபாடுகள் செய்யவேண்டும். இறைவனை மண்டியிட்டுப் பாவ விமோசனம் வேண்டி, தேவாரம், திருவாசகம், திருவிசைப்பா, திருப்பல்லாண்டு, திருப்புராணம், திருப்புகழ் போன்ற திவ்விய பாடல்களைப் பாடியும் கூட்டுப் பிரார்த்தனைகள் ஆலயங்களில் செய்தும்; பாவ விமோசனம் கேட்டு வந்தால்; மனம், மொழி, மெய்யினால் பிரார்த்தனைகள் செய்வதும் இடம்பெற்றால் பாவம் செய்யாமலும் பிறருக்கு இன்னல்கள், இடையூறுகள் செய்யாமலும் நல்வாழ்வு வாழ்ந்து வந்தால் "ஒரு பொல்லாப்புமில்லை" என்ற சிவயோகர் சுவாமிகள் அருளிய திவ்விய வாக்கின்படி நலமாகவும் வளமாகவும் இன்பமாகவும் நிறைவாழ்வு வாழலாம்.

தீபாவளி தினத்தில் பெரியவர்கள், பெற்றோர்கள், உடன்பிறந்தோர், உற்றார், உறவினர், நண்பர்கள், குரு ஆகியோரிடையே நாம் ஆசிபெறுதலும், நல்வாழ்த்துக்களைப் பெற்றுக் கொள்ளலும்; பரிமாறிக்கொள்வதும் வழக்கமாக உள்ளது. "எல்லோரும் அருட்பேராற்றல் கருணையினால் உடல்நலம், நீளாயுள், நிறைசெல்வம், உயர்புகழ், மெய்ஞானம் யாவும் ஓங்கி; வாழ்க வளமுடன் என்றும் அஞ்ஞான இருள் நீங்கப்பெற்று ஞான ஒளி எங்கும் பரவ "எல்லோரும் வாழ்க, வளமுடன் என்றும் உளம் கனிந்து வாழ்த்துவது, மரபு வழிவந்த

*பலமுறை முயற்சித்தும் உனக்கு தோல்வி என்றால் உன் இலக்கு தவறானது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பண்பாட்டுப் பாரம்பரியமும் உயர் மனிதப் பண்புமாகும். தொலைவிடங்களில் வாழ்கின்ற உறவினர், நண்பர்களுக்கு, வாழ்த்துமடல்களை அனுப்புவதும்; தொலைபேசியில் அழைத்து, இனிய வாழ்த்துக்களைப் பரிமாறிக்கொள்வதும் வழக்கமாகும். இன்னல் புரிவோர் எதிரிகள் ஆக நினைப்போர் யாவர்க்கும் தீபாவளி வாழ்த்துக்களைத் தெரிவிப்பதால் பகைமை தணிகின்றது; அன்பும் நட்பும் பிரியமும் மீளவும் ஒளிர்கின்றது. (முற்றும்)

---

## யார் சிறந்தவன்?

இது ஓர் நீதிக்கதை. கருத்து நிறைந்தது. சிந்திக்க வைப்பது. மூச்சு - பேச்சு, நோக்கு, செவிப்புலன், மனம் ஆகிய ஐந்தும் ஒருமுறை யார் சிறந்தது என தங்களுக்குள் விவாதித்துக் கொண்டன. ஒவ்வொன்றும் தானே பெரியவன், தானே பெரியவன் எனப் போட்டியிட்டுக் கொண்டன. பின்னர் தங்களது பிதாவாகிய பிரஜாபதியை அடைந்து தங்கள் கருத்தை கூறித் தங்களில் யார் சிறந்தவன் எனக் கேட்டன.

உங்களில் யார் உடலைவிட்டு நீங்குவதால் அதிக துன்பம் நேரிடுகிறதோ அவனே சிறந்தவன் என்கிறார் பிரஜாபதி. தந்தை கூறியதைப் பரீட்சித்துப் பார்க்கத் தொடங்கின. பேச்சு வெளியே சென்று ஓராண்டு வசித்துவிட்டுத் திரும்பியது. உடலே "நான் இல்லாமல் நீ எப்படி வாழ்ந்தாய்" என்று கேட்டது. ஓரளவு நன்றாகவே வாழ்ந்தேன். ஊமையாய்ப் பிறந்தவர்களைப்போல் மூக்கினாற் சுவாசித்தும் கண்ணாற் கண்டும் காதாற் கேட்டும் மனத்தாற் சிந்தித்தும் வாழ்ந்தேன்" என்றது உடல்.

நோக்கு வெளியேறி ஓராண்டுக்குப்பின் திரும்பியது. "நான் இன்றி நீ எப்படி வாழ்ந்தாய்" என உடலைக் கேட்டது. "குருடர்களைப்போல் வாழ்ந்தேன். பார்வையில்லை அவ்வளவுதான் மற்றப்படி பேசிக்கொண்டும், கேட்டுக்கொண்டும் சிந்தித்துக்கொண்டும் சுகமாகவே வாழ்ந்து கொண்டேன்" என்றது உடல்.

செவிப்புலன் வெளியேறியது. ஓராண்டுக்குப் பின் திரும்பிவந்து "உடலே நான் இல்லாமல் நீ எப்படி வாழ முடிந்தது?" என்று கேட்டது. ஓ! அதுவா நீ இல்லாவிட்டால் என்ன சுவாசித்தும் பேசியும் கண்டும் சிந்தித்தும் வாழ்ந்தேன். கேட்கமட்டும் முடியவில்லை. செவிடர்கள்போற் சீவித்தேன் என்றது உடல். மனது வெளியே சென்று ஒரு வருடம் வாழ்ந்தது. திரும்பிவந்து மற்றவர்கள் கேட்டதுபோல் உடலைக் கேட்டது. குழந்தைபோல் வாழ்ந்தேன். சுவாசித்தேன், கண்ணாற் கண்டேன் காதாற் கேட்டேன் சிந்திக்க மட்டும் முடியவில்லை. அவ்வளவுதான் என்றது" உடல்.

போட்டியிற் கலந்துகொண்டவர்களில் கடைசியாக நின்றது மூச்சு. மூச்சும் வெளியேறத் தயாரானது. மூச்சு வெளியேற முயலும்போதே ஏனைய புலன்கள் தங்கள் இருப்பிடங் களிலிருந்து தங்களைக் கிழித்து இழுப்பது போல் துன்பமடைந்தன. கட்டி வைத்த முளைக் கயிற்றின் ஆணிகளைப் பிடுங்கிக்கொண்டு உத்வேகமுள்ள குதிரை கிளம்புவதுபோல மூச்சானது தங்களையும் இழுத்துக்கொண்டு செல்வதாக ஏனைய புலன்கள் சகிக்கமுடியாத துன்பத்தை அடைந்தன.

"வேண்டாம் வேண்டாம் போகாதே போகாதே" என்று அவை ஒன்றாக அலறின. "நீயே சிறந்தவன் நீயே சிறந்தவன். எங்களுடைய சிறப்புக்களெல்லாம் உன்னுடையனவே" என்றன. அன்றிலிருந்து தாம் தாம் பெரியவன் என்ற எண்ணக் கருத்தை அறவே ஒழித்து ஒன்றாக இருந்தன.

*எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம். எது வந்தாலும் நம்பிக்கை அவசியம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தை

**– திரு குணாளன்** அவர்கள் –

“சான்றோன் ஆக்குதல் தந்தையின் கடனே” என்றும் “தந்தையோடு கல்விபோம்” என்றும் பெரியோர் கூறியதை மிகவும் கூர்ந்து நோக்குங்கள்.

“தந்தை மகற்காற்றும் நன்றி அவையத்து
முந்தி இருப்பச் செயல்”

என்ற தெய்வப்புலவரின் வாக்கிற்கேற்பத் தன் மகனைப் பேரறிஞனாக்கி பிறர் போற்றும் வித்தகனாக விளங்கவைப்பது ஒரு தந்தைக்குரிய கடமைகளுள் மிகவும் முக்கியமானதாகும்.

தந்தை ஆனவர் எம்மைக் கண்டிப்பதும் தண்டிப்பதும் எமது நன்மைக்கே எனப் பிள்ளைகள் ஒவ்வொருவரும் எண்ண வேண்டும். விளையாட்டுப் பருவமான இளமைக் காலத்தை வீணே கழிக்கலாகாது. அப்படி இளமைக் காலத்தை வீணாகப் போக்கிய ஒருவன் பிற்காலத்தில் பெரிதும் கவலை அடையநேரும் என்பதில் எந்தவிதமான ஐயமுமில்லை.

அள்ளிக் கொடுக்கின்ற செம்பொன்னும் ஆடையும் ஆதரவாய்க்
கொள்ளிக்கும் பட்ட கடனுக்கும் என்னைக் குறித்ததல்லால்
துள்ளித் திரிகின்ற காலத்திலேயென் துடுக்கடக்கிப்
பள்ளிக்கு வைத்திலனே தந்தை ஆகிய பாதகனே.

மேற்படி பாடல்மூலம் பிற்காலத்தில் பிள்ளைகள் எண்ணி எண்ணி மனம் வருந்தியவராய்த் தந்தையை குறைகூற வேண்டியவர்களாவார்கள். தந்தை சொற்கேளாது இளமையில் வீணே பொழுது போக்கும் ஒவ்வொரு பிள்ளையும் பிற்காலத்தில் மனம் வருந்தியேதீர வேண்டும். ஆனால் சென்ற காலம் மீண்டும் வராது என்பதை நாம் ஒவ்வொருவரும் புரிந்துகொள்ள வேண்டும். வருந்தி அழைத்தாலும் சென்ற இளமைக் காலம் மீண்டும் எமது வாழ்நாளில் வராது என்பது முற்றிலும் உண்மை. எனவே நாம் ஒவ்வொருவரும் தந்தையின் சொற்படி இளமைக்காலத்தில் நன்கு கல்வி பயின்று தந்தைக்குப் புகழ் தேடிக்கொடுக்கும் பிள்ளைகளாக வாழப் பழகிக்கொள்ள வேண்டும். சில பிள்ளைகள் தந்தையைக் குறைகூறிக்கொள்கிறார்கள். தந்தை தவறான வழியில் நடக்கிறார். நாமும் ஏன் அப்படி நடக்கக்கூடாது என்ற தவறான எண்ணம் உருவாகிறது. அப்படி பிள்ளைகளின் மனத்தில் உருவாகக் கூடாது. பிள்ளைகள் நல்வழியில் நடந்தால் பிழையான நடத்தையைக் கொண்ட தந்தையும் திருந்தி நல்வழியில் வாழ்வார் என்பதில் எந்தவிதமான சந்தேகமும் இல்லை. தந்தை எம்மைவிடப் பெரியவர். எனவே நாம்தான் பணிந்து நடந்து பெற்றோரைவிடப் பிள்ளை அறிவுடையவனாக விளங்க வேண்டும். இதற்கு உதாரணமாக “தந்தை பத்து அடி பாய்ந்தால் தனயன் பதினாறடி பாயவேண்டும்” என எமது முன்னோர்கள் கூறுவது எனது ஞாபகத்திற்கு வருகிறது. அதற்காகத் தவறான செயல்களைச் செய்யவேண்டும் என்பது இதன் கருத்தல்ல. மேலும் மகன் தந்தையிலும் பெரிய தகுதியைப் பெறவேண்டும்.

*ஒவ்வொரு நாளும் வெற்றிப்பயணத்தை தொடங்கிவிட்டேன் என்று முதலடி எடுத்துவை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"மகன் தந்தைக்கு ஆற்றும் உதவி இவன்தந்தை
எந் நோற்றான் சொல் எனும் சொல்"

அதாவது ஒரு பிள்ளையைப் பிறர் பார்த்து இவனது தந்தை இவனைப் பெற்றெடுக்க என்ன தவம் செய்தாரோ என புகழ்ந்து வியக்கும் வண்ணம் பிள்ளைகள் ஆகிய நாம் வாழப் பழகிக்கொள்ள வேண்டும்.

எனவே தந்தையிடும் உத்தரவுகளைத் தலைமேல் தாங்கி அவர் உள்ளம் உவகை கொள்ளுமாறு நன்கு பயில வேண்டும். ஏனெனில் "தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை" தந்தையின் சொல்லை எவன் ஒருவன் மதித்து நடக்கிறானோ அவனுக்கு வாழ்வில் எந்த இடரும் வராது. எதிலும் வெற்றி பெற்றுச் செல்வான் என்பதில் சந்தேகமும் கிடையாது.

சலவைத் தொழிலாளி சேலையைக் கல்லில் மோதுவது கிழிப்பதற்கல்ல. அழுக்கைப் போக்கவே ஆகும். அதுபோல் பிள்ளைகளாகியவர்களைத் தந்தை கண்டிப்பதும், தண்டிப்பதும் வருத்தவல்ல. எதிர்காலத்தில் இவ்வுலகில் பலரும் போற்றும் உத்தமர்களாக வாழவேண்டும் என்பதற்கேற்ப எம்மை எல்லாம் கண்டித்து வளர்க்கிறார். பிள்ளைகள் தம்மைத் தண்டித்து வளர்க்கும் தந்தைமீது கோபம் கொள்ளக்கூடாது. இன்றுமுதலாவது எம்மைக் கண்டித்து வளர்க்கும் தந்தைமீது கோபம் கொள்ளாது அவர் செய்யும் செயல் எம்மை நல்வழிப்படுத்தவே என நினைத்து அவரை மதித்து நடக்கப் பழகிக்கொள்வோமாக.

## பேறு தனை எனக்கருள்வாய் மாணிக்கப் பிள்ளையாரே

ஆற்றங்கரை ஓரத்திலே அழகுறவே வீற்றிருந்து
அகிலத்தை காத்து நிற்கும் ஆண்டவனே
தேடிவரும் அடியவரின் தீவினையை வேரறுக்கும்
வேழமுகம் படைத்த விக்ன விநாயகனே.
வந்தனைகள் செய்து உன்னை வழிபடும் - எந்தனுக்கு
வாழ்வினில் இன்பங்கள் யாவும் வழங்கி நிற்பாய்
உன் தேனாற்றில் முழ்கி எழுந்து தெய்வீகத் துதிபாடி
திருக் கோயில் உருண்டு வந்து தேங்காய் உடைத்து நின்றேன்.
அறுகம் புல்லு மாலை கட்டி ஆலிங்கனம் செய்து உன்னை
ஆறுதலை தந்தருள அன்புடன் வேண்டி நின்றேன்
தீமை என்ற ஒன்றை தினை அளவும் கொள்ளாத
வாய்மை நெறிகூட்டி நிற்கும் வாழ்வுதன்னை வரமாக்க
எந்நாளும் உன்நாமம் மறவாமல் போற்றி செய்யும்
பேறுதனை எனக்கருள்வாய் மாணிக்கப் பிள்ளையாரே.

-முருகுப்பிள்ளை செல்லத்தம்பி-

*தன்னம்பிக்கை இருக்குமளவுக்கு முயற்சியும் இருந்தால் வெற்றி நிச்சயம்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பகவத்கீதையின் தத்துவம்

அத்தியாயம் – 10 (தொடர்ச்சி...

## தியாகத்தின் வகைகளும் மன ஒருமைப்பாடும்

– திரு பூ. சோதிநாதன் அவர்கள் –

### 13) ஒத்திசைவு

வழமையாகப் புலன்கள் வேறு எங்காவது செயற்பட்டுக்கொண்டே இருக்கும். மனம் எதையாவது சிந்தித்துக்கொண்டு இருக்கும். புத்தி தடையேதும் இன்றிப் புலன், மனம் என்பவற்றின் நடவடிக்கைகளில் இருக்கும். அவை ஒருபோதும் ஒத்திசைவாக வேலை செய்யாது. புலன்கள் மனம், புத்தி என்பவற்றுக்கு இடையே ஒத்திசைவு இல்லாத காரணத்தால் நாம் கிளர்ச்சிமிக்க ஆளுமைகளாக இருப்போம். விளக்கு ஒளியின் மூன்று சுவாலைகள் ஒன்றாக இணைவதுபோல புலன்கள், மனம், புத்தி என்பவற்றின் ஆற்றல்கள் ஒன்றாக நிற்கவேண்டும். அந்த ஒன்றுபட்ட சுவாலை காற்று இல்லாத இடத்தில் வைக்கப்பெற்றுள்ள விளக்கொளியைப் போல அசையாது இருக்கவேண்டும் என்ற ஒப்புமை கீதையின் ஆறாவது அத்தியாயத்தில் தரப்பெற்றுள்ளது. புலன்களுக்குப் பின்னால் வேலை செய்யும் எவ்வித ஆசையும் இருக்காதபோதும், வெளியில் எதையாவது நோக்கி மனதைச் செலுத்தும் ஓர் உந்துதல் இல்லாதபோதும், புத்தி தனது காரண காரியத்தில் நிறைவானதாய் இருக்கும்போதும் உள்ள நிலையை நாம் அடைவோம். ஒருவரது வாழ்வில் வேறேதுமில்லாத இலக்கு மோட்சமாகும். எமது கல்வி, ஈடுபாடுகள், மற்றெவையும் எவ்வகையில் செய்யப்பட்டாலும் அவை யாவும் வாழ்வின் இலக்கு மோட்சம் என்றும், எமது நடவடிக்கைகள் எல்லாவற்றினதும் இலக்கு ஆன்ம விடுதலை என்றும் நாம் எம்மை நூறு சதவிகிதம் நம்பவேண்டும்.

### 14) அடிப்படை உறுதி

இறைவனின் ஆன்ம விடுதலை இலக்குப்பற்றிய பிரக்ஞையின் பூரணகவனத்தில் இருந்து வெறுப்பு இல்லாமை, கோபம் இல்லாமை, பேராசை இல்லாமை என்பன தாமாகவே வந்து அமையும். இது கீதையின் ஆறாவது அத்தியாயத்தில் கூறப்பெற்றுள்ள யோகத்தின் சாரம் ஆகும். சந்தேகத்திற்கு இடமின்றி இது மிகவும் உற்சாகம் அளிக்கக்கூடிய விடயமே. ஆனால் நாம் உண்மையில் அதனைப் பயிற்சிக்கு எடுத்துக்கொள்ளும்போது புலன்கள் அதற்கு அவ்வளவு இலகுவாக இணங்கப்போவதில்லை என்பதைக் காண்போம். புலன்கள் கட்டுக்கடங்காத குதிரைகள் போன்றன. அவை தமது வண்டியை விரும்பியவாறு இழுத்துச் செல்லும். அத்துடன் இந்த உடம்பு அல்லது ஆளுமையை இழுத்துச் செல்லும் குதிரைகளை ஒரு கட்டுப்பாட்டில் வைத்திருப்பது உண்மையில் மிகவும் கடினமான வேலையே. யோகப் பயிற்சியின் முழுச் செய்முறையும் படிப்படியான ஒன்றே தவிர ஒரு திடீர் இயக்கம் அன்று.

*ஒருநாள் விடியும் என்று காத்திராமல் இன்றே முடியும் என்று முயற்சி செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் யோகத்திற்குள் நுழையும்போது செயலுக்குள் குதிப்பதில்லை. ஒரு கட்டடக் கலைஞன் ஒரு கட்டத்துக்குச் சுவரை எழுப்பும்போது ஒரு நேரத்தில் ஒரு செங்கட்டியை வைப்பதுபோல நாமும் ஒரு நேரத்தில் ஒரு படி மட்டுமே போவோம். ஆனால் அக்கட்டடக் கலைஞன் ஆயிரம் செங்கட்டிகளை ஒரே தொகையாக வைப்பதில்லை. கட்டடக் கலைஞனால் படிப்படியாகவே கட்டடத்தை எழுப்ப முடியும். ஆரம்பத்தில் இருந்தே உறுதியையும், நிலையான தன்மையையும் பேணி வரவேண்டும். அத்திவாரம் பலமுள்ளதா என்று பார்ப்பதற்கு அதிகநேரம் எடுத்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு கட்டியையும் தேவையான சீமெந்தோடு தகுந்த நிலையில் உறுதியாக வைக்க வேண்டும். இல்லாவிடில் முழுக்கட்டடமும் நொறுங்கி விழுவதற்குச் சாத்தியம் உண்டு.

## 15) யோகத்தில் நிலைத்தல்

ஒரு கட்டடத்தைக் கட்டி எழுப்புவதாயினும் சரி, ஒரு நூலை எழுதுவதாயினும் சரி, ஒரு பாடப்புத்தகத்தை தயாரிப்பதாயினும் சரி, கடவுளைத் தியானிப்பதாயினும் சரி, எந்த ஒரு வெற்றிகரமான செயலுக்கும் அவசரமோ, இடையீடோ இருக்கக்கூடாது. எனவே ஒவ்வொன்றும் மிகக் கவனத்தோடும், சுயநலமின்றியும், ஆறுதலாகவும், உள்நோக்கிய அமைதியோடும் செய்யப்பெற வேண்டும். இதற்கு நாம் நேரம் எடுத்துக்கொள்வதாயின் நாம் இழந்தவர்கள் ஆகமாட்டோம். ஏனெனில் ஒவ்வொரு படியையும் புரிந்துகொள்வதற்கு நேரம் எடுத்துக்கொள்வது புத்திசாலித்தனமானது. அன்றேல் அவசரப்பட்டு தேடிய எல்லாவற்றையும் இழக்கவேண்டி வரும். எனவே, இது தொடர்பாக தியான யோகம் என்று அழைக்கப்பெறும் ஆறாவது அத்தியாயத்தில் கீதை கூறுவது என்னவெனில் தனது சொந்த சங்கல்பத்தை அல்லது தனது திருப்திக்கான ஆரம்பத்தை எடுக்கும் மனநிலையை அல்லது தனது கீழ்ப்பட்ட ஆன்மாவின் நலனை கைவிட்டால் அன்றி எவரும் ஒரு யோகியாக முடியாது என்று எமக்குக் கூறுகிறது. எப் பொருள்கள்மீதும் புலன்கள் ஆசை வைக்காதபோதும், தனது ஆளுமையை நோக்கிய எந்தச் செயலுக்கும் அவை தூண்டப்படாதபோதும், அகரீதியாக எல்லா வகை நோக்கங்களையும் கைவிட்டபோதும் மட்டுமே ஒருவர் யோகத்தில் தன்னை நிலைநிறுத்த முடியும்.

## 16) அன்பு

ஆளுமை இன்மையின் திசையில் நாம் ஓர் அடியை எடுத்து வைப்பதே யோகமாகும். அந்த எடுத்துவைக்கும் அடி எந்தளவாகவும் அமையலாம். ஒவ்வொரு ஆளுமையோடும் கூடிய சங்கல்பம், அல்லது ஆசை அல்லது செயல் ஆளுமையிலே வேரூன்றியதாகும். ஆளுமை இன்மையே யோகமாகும். அந்த யோகம் யோக சாத்திரங்களில் குறிக்கப்பெற்ற படிகளினால் அடையப்பெறுகிறது. யோகம் மனதை ஒருமுகமாக்குவதெனக் கூறப்பெற்றிருக்கிறது. அந்த மன ஒருமைப்பாடானது உயர் ஆன்மா ஆவதற்குக் கீழ்ப்பட்ட ஆன்மா செய்யும் பயிற்சியாகும். கீழ்மட்ட ஆன்மாவின் படிநிலைகள் பல உண்டு. அதனால் நாம் முழுப்

*திறமையும் நம்பிக்கையும் இருந்தால் கண்டிப்பாக வாழ்க்கையில் ஜெயிக்க முடியும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிரபஞ்சமும் ஒரே ஆன்மாவை உடையதெனக் கூறலாம். எல்லாமே அந்த ஒரே ஆன்மாவேயன்றி வேறு இல்லை. பொருள்கள் என்று எவையும் இல்லை. பொருள்கள் எல்லாம் கீழ்மட்ட ஆன்மாக்களே. அதன்மூலம் கருதப்பெறுவது யாதெனில் புலன் பொருள்கள் என்று கூறப்பெறுபவற்றில் கூடக் கீழ்மட்ட ஆன்மாவின் ஓர் அம்சம் இல்லாதுவிடில் அந்தப் பொருள்களுக்கான விருப்பம் இருக்கமுடியாது. நாம் விரும்புவதில் ஆன்மாவின் பிரசன்னத்தை அறிந்துகொள்வது மட்டுமே அன்பு. அங்கு ஆன்மா இல்லையெனில் அன்பைச் சிந்திக்க முடியாது. கீழ்மட்ட ஆன்மாவின் பல்வேறு நிலைகளில் சுய அன்பே எல்லா அன்பும் ஆகும்.

## 17) கீழ்மட்ட ஆன்மா

முழுப் பிரபஞ்சமும் ஆன்மா என்றும், எல்லாமே ஆன்மா என்றும் உபநிடத முனிவர்கள் எமக்குக் கூறுவதில் அர்த்தம் இல்லாமல் இல்லை. ஆனால் உபநிடதங்கள் எதனைக் கூறுகின்றன என்றோ கீதை எதைக் கருதுகிறது என்றோ புரிந்துகொள்ளுவதில் ஒருவர் கவனமாக இருக்கவேண்டும். அவை ஆன்மாவுக்குப் பிரபஞ்சம் ஒன்றே எனக் கூறும்போது அக் கூற்றைத் தவறாகப் புரிந்துகொள்ள நேரிடலாம். அத்துடன் அதிலுள்ள அர்த்தத்தை தெரிந்துகொள்வது மிகக் கடினமாகும். கீழ்மட்ட ஆன்மா என்பது திரு, திருமதி நான் என எம்மை எமது சொந்த உள - உடல் தனித்துவமாகக் கருதுவதாகும். இன்றைய எமது நடைமுறை நோக்கங்களுக்கான கீழ்மட்ட ஆன்மா இதுவே ஆகும். ஆனால் அந்த எமது கீழ்மட்ட ஆன்மாவின் மனநிலைகள், செயற்பாடுகள் என்பவற்றுக்குப் பின்னால் உள்ள நோக்கங்களை நாம் பகுப்பாய்வு செய்வோமானால் அதனுடைய உள்நோக்கம் சுயநலம் என்பதை நாம் உணருவோம். சுயநலம் என்பது கீழ்மட்ட ஆன்மா பற்றிய கருத்தின் ஒரு குறிப்பிட்ட விளக்கமாகும். பொருள்களை நோக்கிய புலன்களின் ஈர்ப்புக் கீழ்மட்ட ஆன்மாவின் செயலாகும். புத்தி என்ற கருவியின் ஊடாகக் கீழ்மட்ட ஆன்மாவே பொருள்களை நோக்கிப் புலன்களைத் தள்ளுகிறது. பொருள்களோடான ஐக்கியமே கீழ்மட்ட ஆன்மாவின் திருப்தி என்ற கருத்துப்படி மனம் பொருள்களோடு ஐக்கியமாக வருகிறது. எனவே புலன்களது பொருள்களோடு உள்ள தொடர்பு வருவதன் பின்னாலுள்ள நோக்கம் கீழ்மட்ட ஆன்மாவின் திருப்தியே ஆகும்.

## 18) பிழை

அத்துடன் கீழ்மட்ட ஆன்மாவின் பிரதான தூண்டுதல் பொருள்களுக்கான விருப்பம் அல்ல. பொருள்களுக்கான விருப்பம் முழுமையானது அன்று. ஒருவரது கீழ்மட்ட ஆன்மாவின் திருப்திக்காக மட்டுமே அவ்விருப்பம் இருக்கின்றது. நாம் பொருள்களோடு தொடர்பில் வராவிடில் கீழ்மட்ட ஆன்மாவின் திருப்தி சாத்தியமில்லை என்ற ஒரு மயக்கமே அதற்குக் காரணமாகும். இந்தநிலை மேலோங்குவது அல்லது இடம்பெறுவது ஏன் என்பது பற்றிய பல்வேறு காரணங்கள் தரப்பெறுகின்றன. நாம் எவ்வாறு இந்தப் பிழையைச் செய்கின்றோம்?

(தொடரும்...

*கலங்காத உள்ளம் படைத்தவர்களே இறுதி வெற்றிக்கு உரியவர்கள்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவ நற்சிந்தனை

– திரு இ. சரவணபவன் அவர்கள் –

சிந்திப்பவன் மனிதன். சிந்தனை தோன்றும் இடம் மனம். சிந்திப்பதன்மூலம் மனிதன் நன்மை தீமை இவையெனப் பிரித்து உணருகின்றான். இவ்வாறு சிந்தித்து நன்மையானவை என உணர்ந்தவற்றை வாழ்க்கையில் கடைப்பிடிக்கிறான். தீமையானவை எனத் தெரிந்தவற்றை நீக்கி விடுகிறான். இதுவே மனிதத் தன்மை. எனவே மனம் உள்ளவன் மனிதன் எனப்படுகின்றான். இந்த அருமையான மனத்தை அழுக்கேறாத வண்ணம் நாம் பார்த்துக்கொள்ள வேண்டும். மனத்தைத் தூய்மையாக வைத்திருத்தலே மிகச் சிறந்த அறம் என்கிறார் வள்ளுவப் பெருமான்.

"மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்து
அறன் ஆகுல நீரபிற" என்பது தமிழ்மறை.

மனத்தைத் தூய்மையாக வைத்திருப்பது எப்படி? இது மிகக் கடினம் என நாம் கருதிக்கொள்கிறோமே தவிர உண்மையில் மிக இலகுவானது. நமது உடலில் உள்ள அழுக்குகளை நீர், சவர்க்காரம் கொண்டு கழுவி அகற்றி உடலைச் சுத்தப்படுத்துவதற்குக் கூடச் சிறிது பணச்செலவு ஏற்படும். அந்த செலவுகூட மனதைத் தூய்மைப்படுத்துவதற்குத் தேவைப்படாது. நல்ல சிந்தனை, உண்மை பேசுதல், நல்ல கருமங்களை ஆற்றுதல், நல்லவர்களோடு சேர்தல் என்பன மனம் தூய்மையாக இருப்பதால் ஏற்படுபவை.

"அறம் செய விரும்பு" என்பது ஔவையார் வாக்கு. அறம் செய்வதற்கும் மனம்தான் முக்கியம். மனம் விரும்பினாலேயே அறம் செய்ய முடியும். மனம் களங்கமற்றுத் தூய்மையாக இருந்தாலே அங்கு தோன்றுகின்ற எண்ணங்கள், விருப்புக்கள் என்பன நல்லனவாக அமையும்.

எமது மனதில் படிந்துவிடக்கூடிய அழுக்குகளை வள்ளுவர் வகைப்படுத்தித் தந்துள்ளார். அழுக்காறு, அவா, வெகுளி, இன்னாச்சொல் என்பவையே அந்த நான்கும். இந்த நான்கிற்கும் ஒரு கடுகளவேனும் எம் மனத்தில் இடம்பெறுவதற்கு இடமளிக்காது ஒழுகி வருதல் மேலான அறம் ஆகும். "மனமது செவ்வையானால் மந்திரம் தேவையில்லை" என்றும் "மனம்போல வாழ்வு" என்றும் எம்மத்தியில் நிலவிவரும் முதுமொழிகள் பொருள் நிறைந்தவை. மனிதன் எவ்வாறு நினைக்கின்றானோ அவ்வாறே, அதன் மயம் ஆகிறான். எனவேதான் நாம் நல்லவற்றையே எப்பொழுதும் நினைக்கவேண்டும். அப்பொழுதுதான் நல்லவர்களாக வாழலாம் என்று பெரியோர்கள் கூறுகின்றனர். உண்மையில் ஒழுக்கம் என்பது ஒருவனது நினைப்புக்களின் கூட்டுமொத்தமே.

எம் மனத்தில் படிகின்ற அசுத்தங்களில் அழுக்காறு என்பது பொறாமை ஆகும். மனத்தில் பொறாமை ஏற்படாது இருத்தல் சிறந்த அறம். பொறாமையின் தீய வலிமை மிகக் கொடியது. மனிதநேயத்தையே அழித்து இறுதியில் பொறாமை கொண்டவனையும் அழித்துவிடும் சக்தி வாய்ந்தது. பொறாமை இடம்பெறும் உள்ளத்தில் அன்பினை இடம்பெறச் செய்தால் நாமும் செம்மையாக வாழ்ந்து ஏனையோரையும் மகிழ்ச்சியாக வாழ வைக்கலாம்.

*எதையும் பெரிதுபடுத்தாமல் பழகிவிட்டால் வாழ்க்கை இனிமை தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றொரு அசுத்தம் அவா என்னும் ஆசையாகும். "ஆசை மிகமிக ஆய்வரும் துன்பங்கள், ஆசை விடவிட ஆனந்தமாமே" என்பது திருமூலர் வாக்கு. ஆசையின் காரணமாகவே பிறர் பொருளைக் கவரும் எண்ணம் தோன்றுகிறது. நிலையான இன்பம் பெறவேண்டுமானால் ஆசையை அறவே ஒழிக்க வேண்டும். அறத்தால் வருவதே உண்மையான இன்பம் என்பதை உணர்ந்துகொள்ள வேண்டும்.

வெகுளி என்பது கோபம், சினம் ஆகும். "சினம் என்னும் சேர்ந்தாரைக் கொல்லி" என்று அதன் கொடுமையான இயல்பு குறிப்பிடப்பட்டுள்ளது. எனவேதான் "ஆறுவது சினம்" என்கிறார் ஔவைப்பிராட்டியார். தணிக்கப்பட வேண்டியது கோபம் எனும் தீமையே. கோபம் பாவமாக முடியும் என்பர். எல்லாப் பாவங்களுக்கும் "கோபமே அடிப்படைக் காரணம் பாவத்தை விலக்குவதனால் கோபத்தை விலக்க வேண்டும். பிறர் சீண்டினாலும் கோபத்தை வரவழையாத ஆற்றலைத் தரவேண்டும் என்று இறைவனை வேண்டுதல் செய்தல் மேலான பிரார்த்தனை ஆகும்". கோபம் செல்லாத இடத்தில் அது தானாக அடங்கிவிடும். தன் கோபம் செலுத்தக்கூடிய இடத்தில் கோபம் வராமல் தடுப்பவனே கோபத்தை அடக்கியவன் என்ற அறத்தைச் செய்தவனாகின்றான். கோபம் தீய அன்பு மலர் போன்றது. எனவே கோபம் தோன்றுமிடத்தில் அன்பு மலரமாட்டாது. முகத்தில் புன்னகை தோன்றமாட்டாது. சாந்தியையும் சமாதானத்தையும் தூரத் தள்ளிவிடும்.

சினம் தன்னை மட்டுமல்ல, தன்னைச் சார்ந்தவர்களையும் அல்லற்படுத்த வல்லது. இப்படிப்பட்ட கொடுமையான கோபத்தை நாம் ஏன் ஆதரிக்க வேண்டும். சிந்தித்துப் பாருங்கள். எவருக்குமே நன்மையைத் தராத கோபத்தை முற்றிலாக நீக்கிவிடுதல் மேலான அறம் என்பது சைவநெறி கூறும் உண்மை.

இறைவன் நமக்கு மொழியைத் தந்தது. பேசும் ஆற்றலைத் தந்தது. எல்லோருடனும் இன்சொல் பேசி மகிழ்வதற்காகவே. இன்சொல் பேசுவதினால் அறம் பெருகும். அல்லவை தேயும். நல்ல இனிய கனிகள் இருக்கும்போது காய்களை விரும்பி உண்போர் இருப்பார்களா? இருக்கமாட்டார்கள். இனிய சொற்கள் இருக்கக்கூடியதாக இன்னாத சொற்களைப் பேசித் துன்பத்தை அழைப்பது பேதமையாகும். பொறாமை, கோபம், ஆசை, இன்னாச்சொல் என்பன மனிதகுலத்திற்கு உரித்தானவை அல்ல என்பதை உணர்ந்து அவற்றை விலக்கி அன்பு, நாண், ஒப்புரவு, கண்ணோட்டம், வாய்மை என்ற ஐந்து சால்புகளையும் ஆதரித்து நாம் வாழ்க்கையில் உய்வு பெறுவோமாக.

அன்பே சிவம்.

---

*இறைவன் உன் உள்ளத்தில் எழுந்தருள வேண்டுமானால் உன் உள்ளம் தூய்மையாக இருக்க வேண்டும். குப்பை நிறைந்த இடத்தில் நீ இருக்க அருவருப்புக் கொள்வாயன்றோ? அதுபோல் காமம், கோபம், வஞ்சனை, சூது, புலை, கொலை, பொய் முதலிய அசுத்தங்கள் நிறைந்த உள்ளத்தில் இறைவன் இருக்கமாட்டான். ஆனபடியால் சாந்தமாகிய பசுவின் சாணத்தால் மெழுகி அன்பு என்ற சந்தனம் தெளித்து அறிவு என்ற விளக்கேற்றி உண்மை என்ற தூபம் கமழவை. இறைவன் அந்த உள்ளத்தில் எழுந்தருளுவான்.* -வாரியார் சுவாமிகள்.

*நம்பிக்கை நிறைந்த ஒருவர் யார் முன்னேயும் எப்போதும் மண்டியிடுவதில்லை.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(தொடர்ச்சி...

# ஆனந்த சாகரம்

– **திருமதி சிவனேஸ்வரி பாலகிருஸ்ணன்** அவர்கள் –

## தைப்பூசம்

பூச நட்சத்திரம் சேர்ந்த தை மாதப் பௌர்ணமியன்று தைப்பூசத் தினமாகும். கந்தப்பெருமானுக்கு அன்னை உமாதேவியார் இத்திருநாளில் வேல் அளித்தார்கள். ஞான சக்தியின் வடிவமாக பேரருளின் சின்னமாக திருவேல் விளங்குகிறது. அறியாமை சூழ்ந்த தீய சக்திகளை இது அடியோடு வேரறுத்து ஆன்மீக வழியில் வெற்றிகரமாக நம்மை அழைத்துச் செல்லும். சோதியுள் சோதியாக வேல் விளங்குகிறது. முருகன் இன்றி வேல் இல்லை. வேல் இன்றி முருகன் இல்லை. சக்திவேல் மல இருளைக் கெடுத்து, ஞான ஒளியைக் கொடுத்து அருள் சுரக்கும். "நீயான ஞான விநோதந்தனை என்று நீ அருள்வாய்" என அருணகிரிநாதர் அங்கலாய்க்கிறார். முருகன் எழுந்தருளும்போது மயில் பெருமை பெறுகிறது. வெற்றிவாகை சூடும்போது சேவற்கொடி சிறப்படைகிறது. முருகனுடைய திருக்கைவேல் கிரௌஞ்ச மலையைப் பொடிப் பொடியாக்கி தாரகாசுரனை வதம் செய்து சூரனை வென்று தேவர்களுக்கு வாழ்வளித்தது. தேவசேனாபதியின் ஞான சக்திவேல் நக்கீரர் முதலான ஆயிரம் அடியவர்களை பூதத்தைக் கொன்று, குகையை இடித்து எல்லாருக்கும் பெருவாழ்வு கொடுத்தது.

நல்ல வேல், போகங்கள் நல்கும் வேல், துன்பமகற்ற வல்லவேல், பேராண்மை வாய்ந்த வேல், சொல்லற்கரிய ஏற்றமிகுந்த வெழில் வேல், குகன் கரத்தில் வீற்றிருக்கும் தெய்வ வடிவேல், இன்பமருளும் முத்திவேல், அன்பர் நினைக்கும் வேல், செல்வச்சந்நிதியில் வீற்றிருந்து கருணைமழை பொழியும், சிவனாரின் செல்லப்பிள்ளையின் செங்கையில் ஏந்திய வெற்றிவேல் என்றும் துணை நமக்கே.

வேலை வணங்குவதே வேலை - வேலன்கை
வேலை வணங்காது வேறென்ன வேலை.

(வேலை வணங்குவதே)

தைப்பூசம் மிகவும் விஷேசமானது. அன்றைய தினம் விரதமிருந்து இறைவனை வழிபட பலவித தோஷங்கள், பாவங்கள் அகலும். தைப்பூசத்தின் பெருமையை "தைப்பூசம் காணாது போதியோ பூம்பாவாய்" என ஞானசம்பந்தப் பெருமான் பாடியுள்ளார். எல்லா முருகன் ஆலயங்களிலும் அன்றையதினம் அபிஷேக ஆராதனைகளும், அன்னதானங்களும் நடைபெறும். விஷேசமாகப் பழனியிலே பக்தர்கள் குவிந்தவண்ணமிருப்பார்கள். காணிக்கைகளைக் காவடிகளாக எடுத்துக்கொண்டு, நடைப் பயணமாகப் புறப்பட்டு ஆடிப்பாடி முருகன் சந்நிதி வந்து, அவனால் படைக்கப்பட்டவற்றை, அவனுக்குப் படைத்து வணங்குவது தைப்பூசத் திருநாள். தைமாத அறுவடைப் பொருட்களை முருகனுக்குக் காணிக்கையாக்கவே தைமாதப் பூசநாள் பூஜைநாள் ஆனது. ஒன்று கொடுத்தால் பத்தாக வரும் என்ற நம்பிக்கையில்

*நம்பிக்கை கடவுளையும் அசைக்கும். பயம் எதிரியையும் செயற்பட வைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேவல், பசு, காளை என நேர்ந்துவிட்ட பண்ணைப் பொருட்களை முருகனுக்கு சேர்ப்பிக்கும் திருவிழா இது.

"நீரையா காவேரி நித்தமையா சங்குநாதம்
தேரையா தைப்பூசம் தென் பழனி வேலோனே"

எல்லா முருகன் ஆலயங்களிலும் சிறப்பாகத் தைப்பூசம் கொண்டாடினாலும், பழனியிலே மிக விஷேசமான திருவிழாவாகும்.

தைப்பூசம், பங்குனி உத்திரம் ஆகிய நாட்களில் முருகன் ஆலயங்களுக்கு, விஷேசமாக பழனியில் ஆயிரக்கணக்கான காவடிகள் வரும். அவர்கள் முருகனை நினைத்து ஆடிப் பாடுவது நமது உள்ளத்தை உருக்கும். பங்குனி உத்திர நன்னாளில் ஆயிரக்கணக்கான காவடிகளுடன் மக்கள் திரள் திரளாக வந்து முருகப்பெருமானைத் தரிசித்து அருள் பெறுவர். பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தில் பெருவாரியான சிவன், முருகன் கோயில்களில் திருக்கல்யாண உற்சவம் நிகழும். பங்குனி மாதம் உத்திர நட்சத்திரத்தை ஒட்டியே பௌர்ணமிநாள் அமையும். அன்றுதான் பார்வதி, பரமேஸ்வரன் திருக்கல்யாணம் நடந்தது.

வெகு கோடி நாமங்கள் கொண்ட சிவகாமிபாலன், தொண்டர்களைத் தேடி வரும் தண்டபாணித் தெய்வம், தந்தைக்கு உபதேசம் செய்த விந்தை மிகுந்த பாலன், தேவர் சிறைமீட்ட செல்வன், கண்கண்ட தெய்வம், கலியுகவரதன், சந்நிதியில் அன்னதானக் கந்தனாக அருள்புரியும் வேலனின் சேவடி பற்றி நித்திய ஆனந்த வாழ்வு பெற முருகன் கைவேலை வணங்குவதே வேலை.

தோகை மேல் உலவும் கந்தன்
சுடர்க் கரத்திருக்கும் வெற்றி
வாகையே சூடும் வேலை
வணங்குவது எனக்கு வேலை"

"வீரவேல் தாரைவேல்" எனும் திருமுருகாற்றுப்படையை தினம் ஓதிவர, எல்லா இடர்களையும், துன்பங்களையும் வேல் தடுத்து நிறுத்தி என்றும் துணை நின்று காக்கும். மரண காலத்தில் "மைவரும் கண்டத்தர்" என்று அடைக்கலம் புகுந்தால், பயந்த தனிவழியில் வருகின்ற துன்பம் நம்மைச் சாராது சத்துரு சங்கார வேல், சண்முகன் கைவேல், இன்பவடிவேல், மயிலோடு துணைவரும்.

மனோன்மணி அம்பாள் ஆலயத்தில் தைப்பூசத் திருவிழா, அபிஷேக ஆராதனைகள் சிறப்புற நடைபெற்று, அன்னதானமும் இடம்பெறும். நாம் அன்னையையும், முருகப் பெருமானையும் அன்றைய தினம் விரதமிருந்து வழிபட்டு, சகல செல்வ யோகமிக்க பெரு வாழ்வும், சிவஞான முத்தியும் பெறுவோமாக. (தொடரும்...

## குருபூஜை தினங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| நவம் | 12 | ஐப் 26 | ஞாயிறு | மெய்கண்டதேவர் |
| டிசம் | 04 | கார் 18 | திங்கள் | ஆறுமுகநாவலர் |
| டிசம் | 16 | கார் 30 | சனி | இராமநாதர் |

*மனம் எதைத் தீவிரமாகச் சிந்திக்கிறதோ அதுவாகவே மாறிவிடும் தன்மைகொண்டது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விழிக்குத்துணை

– திரு சிவம் அவர்கள் –

எமது உடம்பு குகப்பெருமான் குடி இருக்கும் குகாலயம். "உடம்பினுக்குள்ளே உறுபொருள் கண்டபின் உடம்பினை நானிருந் தோம்புகின்றேனே..." திருமந்திரம்.

எண் சாண் உடம்பில் சிரசே பிரதானம். அந்தச் சிரசிலும் கண்ணே மிகச் சிறந்தது. நமது மற்றைய உறுப்புக்கள் எல்லாம் வளர்ச்சியடைகின்றன. ஆனால் கண் மட்டும் வளர்வதில்லை. ஆனாலும் அதுவே சிறந்தது. ஆகவேதான் இறைவனை "கண்ணே! கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்" என்று பாடியுள்ளனர். இறைவனை மட்டுமா? அன்புக்கு உரியவர்களையெல்லாம் "கண்ணே" என்று அழைக்கின்றோம். அல்லவா?

நம் பார்வைக்கு ஒளியின் துணை தேவை. விஞ்ஞானத்தின்படியும் ஒளிக்கதிர்கள் பொருட்களிற் பட்டுத் தெறித்துக் கண் படலத்தின் வழி நுழைந்து விழித்திரையில் பிம்பத்தை ஏற்படுத்துகின்றது. அங்கிருந்து அது மின்காந்த அலைகள் மூலம் மூளைக்குச் சென்று பார்க்கும் பொருளின் பிம்பத்தை மூளையிற் பதிவு செய்ததன்மூலம் பார்க்க முடிகின்றது. சிலரைப் பார்த்த மாத்திரத்தில் வெறுப்பு, கோபம் ஏற்படுகின்றன. இன்னும் சிலரைப் பார்க்கும்போது அன்பு, பாசம், காதல் இப்படிப் பல உணர்வுகளும் ஏற்படுகின்றன. ஏன்? ஒளி அலைகளிற் கேடு இல்லை. விழித்திரையில் தீமை இல்லை. மின் அலகில் இல்லை. பொருட்களின் பிம்பங்கள் ஒரே செயற்பாடாகவே நிகழ்கின்றன. ஆனால் மூளையில் ஏற்கனவே பதியப்பெற்ற தீய எண்ணங்கள் உடனடியாகச் சேர்ந்து செயற்படுகின்றபடியால் இப்பேற்பட்ட விருப்பு வெறுப்புக்கள் பார்வையில் ஏற்படுகின்றன.

இதைத் தவிர்க்க விழிக்கு ஆன்மீக ஒளித்துணை தேவை. அது விருப்பு, வெறுப்பு, கோபம், பொறாமை, பெருமை சிறுமை இவற்றிற்கெல்லாம் அப்பாற்பட்டது. ஆகவேதான் விழிகளை இறைவன் திருப்பாதங்களை நோக்கி அப் பேரொளியின் கருணைத்துணை கிடைக்க வேண்டும் என்று அடியவர்கள் திருவடிகளில் சரணபுகுந்தனர்.

"நாயினேன் தன் கண்ணினை நின் திருப்
பாதப் போதுக்காக்கி...." என்பார் மணிவாசகர்.

முருகன் பிள்ளைத் தமிழ் பாடலில் ஒரு காட்சி வருகின்றது. முருகன் உச்சியிலிருந்து உள்ளங்கால் வரை "முழுதும் அழகிய குமர" என்றார் அருணகிரியார்.

தேவர்களுக்குக்கூட ஒரு அவயவம்தான் அதிசிறந்த அழகுள்ளதாக இருக்குமாம். அழகுக்கு எடுத்துக்காட்டாக குறிப்பிடப்படும் தங்கள் அவயவங்கள் முருகனின் அவயவங்கள் முன் வலிகுன்றி நின்றதை அவர்கள் கண்டு தலை குனிந்தனராம். வழக்கில் கூட முகத்தழகு விழிக்குத்தான் விஷேடம் பேச்சு வழக்கிற்கூட "அவள் முகத்தைப் பார், லக்சுமி மாதிரி இருக்கு" என்று கூறுவர். அந்த இலக்குமிதேவி தான் மாமி என்பதையும் மறந்து முருகனின் முகத்தழகைப் பார்த்து இலயித்தாளாம். திருமாலுக்குத்தான் கண்ணழகு. அதற்காகக் "கண்ணன்"

*கோபத்தால் பிறருக்கு மட்டுமல்ல நமக்கும் தீமையே உண்டாகிறது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றே சிறப்புப் பெயர் பெற்றார். "செங்கண்மால்" என்று புகழப்படுபவன். தன் கண்ணழகை விட முருகனின் கண்ணழகு உயர்ந்து துலங்குவதை அவன் கண்டு புளகாங்கிதமடைந்தானாம். கலைவாணியாகிய சரஸ்வதிக்கு சொல்லழகு. அவள் தன்னைவிட உயர்ந்த வாயழகை முருகனிடம் ஆராய்கின்றாள். சிவனாருக்குச் சொற்பொருளழகு நக்கீரனுடனேயே சொற்போர் புரிந்து திருவிளையாடல் புரிந்தவரல்லவா. தன் குமாரனின் சொற்பொருளின் அழகு தன்னை விஞ்சி நிற்பதைக் கண்டு களி பேருவகை கொள்கின்றாராம். தோள் அழகு இந்திராணிக்கு அவள் முருகனின் பன்னிருதோள் அழகினை ஆராய்ந்து மெச்சுகின்றாள்.

இப்படி ஒவ்வொருவரும் முருகனது ஒவ்வொரு அவயவத்தினைப் பார்த்து பிரமித்து நிற்க, களங்கமில்லா மனத்து அடியவர்களோ! அடியழகு கண்டார்கள். ஒவ்வொருவர் ஒவ்வொரு அவயவத்தினைப் பற்றி நிற்கட்டும் எமக்கு அவன் மென்மையான மலர் போன்ற ஒளி பொருந்திய திருவடிகள் இரண்டும் போதுமே என நின்றார்கள்.

ஆகவேதான் அவர்களை அடியவர்கள் என்றார்கள். முடியவர்கள், முகத்தவர்கள், மூக்கவர்கள் என்று கூறவில்லையே. இதோ பாடல் அடியவர்கள் என்பது ஒரு பேறு.

கமல மடமங்கை வதனத்து
அழகு காண்பள் - அக்
கரியமுகில் வண்ணனோ
கண்ணழகு காண்பன்
அரியமுக்கட் தாதையோ சொற்
பொருளின் அழகு காண்பர்
வளர் கலை வாணி
சொல்லழகு காண்பள்
வீறு தோளழகு இந்தி
ராணி காண்பள்
நிமல மன அடியர்
அடியழகு காண்பர் என்றார்.

அதைத்தான் அருணகிரிநாதர் கந்தரலங்காரத்தின் முதல் வரியில் "விழிக்குத்துணை திரு மென் மலர்ப் பாதங்கள்" என்று உணர்ந்து பாடினார்.

ஆகவே எமது விழிகளின் பார்வை செம்மையாகவும், தெளிவாகவும், தூயதாகவும் அமையவேண்டுமானால் செவ்வேட் பரமனது மென்மையான மலர் போன்ற அருள் ஒளி வீசும் திருவடிகளின் துணை நமக்கு என்றென்றும் தேவை. கண்கள் பெற்ற பயன் அவரின் அழகிய கோலத்தைக் கண்டு களித்து அதன் துணைக்கொண்டு உலகினைக் காண்பதே. அது என்றும் எமக்கு நன்மையே பயக்கும்.

---

*ஆலயத்தின் மூர்த்திகரம் அல்லது தெய்வீகத் தன்மையானது வானலாவிய கட்டடங்களாலோ அல்லது கோபுரங்களாலோ நிர்மாணிக்கப்படுவது அல்ல. அது மக்களின் வாழ்வு மேம்பாட்டிற்கு எவ்வளவு தூரம் சேவையாற்றி இருக்கின்றது என்பதில்தான் அதன் தெய்வீகம் தங்கி உள்ளது.*

***நற்செயலில் ஈடுபடுபவர்களை கடவுள் ஒருபோதும் கைவிடமாட்டார்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வழித்துணை 76

– ஆசிகவி செ. சிவசுப்பிரமணியம் அவர்கள் –

01 லட்சுமித் தெய்வத்தாயை செல்வத்தைத் தருவாளென்று
இல்லத்தே வைப்பதற்கு இனங்கண்டு வாங்கும் போதும்
கொட்டும்தாய் வேண்டாம் சும்மா இருப்பதே போதுமென்போம்
இறையிலும் குறையே கண்டால் இறை நிசத்திலில்லை நிழலிலாமோ.

02 நிலமே இறைவனது பாதமென்று உணராமல்
பலங்காட்டிப் பலவழியில் பாரிதனைப் பிளந்திட்டு
தலமொன்று வைத்து அதை வலம் வந்து பணிந்திட்டால்
நலம்பல தந்திறைவன் நமைக்காத்து அருள்வானோ.

03 ஜலமே இறைவனது இடுப்பென்று உணராமல்
மலமெல்லாம் கொட்டியதை மாசடையச் செய்திட்டு
கலமொன்றில் ஜலமெடுத்து கும்பமெனக் கும்பிட்டால்
புலம் காக்க இறைவனார் புகுந்ததற்குள் வருவாரோ.

04 நெருப்பே இறைவனது வயிரென்று உணராமல்
செருப்பினால் கூடஅதை மிதித்தரைத்து அணைத்திட்டு
தெருக்கோடிப் பிள்ளையாற்கு தீபமொன்று ஏற்றிவிட்டால்
கருப்பொருளார் அதற்காக கருணைபொங்கி அருள்வாரோ!

05 காற்றே இறைவனது நெஞ்சென்று உணராமல்
தூற்றியே அவர் நெஞ்சைத் தூசாக மாற்றிவிட்டு
சேற்றிலே மலர்ந்ததொரு தாமரையைச் சாத்திவிட்டால்
நேற்றையதை மறந்திறைவன் இன்றுஅருள் புரிவானோ.

06 வானமே இறைவனது சிரமென்று உணராமல்
ஆனமட்டும் அழுக்கெல்லாம் அதில்சேர விட்டிட்டு
கானத்தை மட்டும்நாம் இசைத்து அதில் கலக்கவிட்டால்
ஈனத்தை மறந்திறைவன் எமக்கிரங்கி அருள்வானோ.

*பிரார்த்தனைகளை விடவும் மிகவும் உயர்ந்தது பொறுமைதான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

07 சமயம் ஒன்றில்நீர் பிறந்ததற்காய் மகிழாமல்
சமயம் ஒன்றில் நீர் பிறந்ததற்காய் வருந்தாமல்
சமயங்கள் எல்லாமே ஓர் வழியைக் காட்டுவதால்
ஏதோஒரு சமயத்தில்நீர் இருப்பதற்காய் மகிழ்ந்திடுவீர்.

08 சமுதாயம் ஒன்றில் நீர் பிறந்ததற்காய் மகிழாமல்
சமுதாயம் ஒன்றில் நீர் பிறந்ததற்காய் வருந்தாமல்
மனிதம் ஓர்முறைதான் எல்லோர்க்கும் கிட்டுவதால்
மனித சமுதாயத்தில்நீர் பிறந்ததற்காய் மகிழ்ந்திடுவீர்.

09 பாசை ஒன்றினை நீர் பேசுதற்காய் மகிழாமல்
பாசை ஒன்றினை நீர் பேசுதற்காய் வருந்தாமல்
பேசுதற்கே முடியாரும் பாரிதனில் வாழ்வதால்
ஏதோஒரு பாசையைநீர் பேசுதற்காய் மகிழ்ந்திடுவீர்.

10 நாடு ஒன்றில் நீர் வாழ்வதற்காய் மகிழாமல்
நாடு ஒன்றில் நீர் வாழ்வதற்காய் வருந்தாமல்
வாழவே முடியாமல் மாள்வோரும் இருப்பதனால்
ஏதோஒரு நாட்டில் நீர் வாழ்வதற்காய் மகிழ்ந்திடுவீர்.

**சந்நிதியான் ஆச்சிரமம் மேற்கொண்டுவரும் நித்திய அன்னப்பணிக்கும் மற்றும் ஆச்சிரமத்தினால் நடாத்தப்படும் சகல சமுதாயப் பணிகளுக்கும் உதவிபுரிய விரும்புவோர் கீழே உள்ள முகவரியுடன் தொடர்பு கொள்ளவும்.**

**காசுக்கட்டளை**
செ. மோகனதாஸ்
சந்நிதியான் ஆச்சிரமம்,
தொண்டைமானாறு.
தொ.இல – 0213219599, 0212263406

**காசோலை**
செ. மோகனதாஸ்
க.இல – 7342444
இலங்கை வங்கி,
பருத்தித்துறை.

**Swift code - BCEYLKLX 028 - 7342444**

E.mail : suthanm329@gmail.com
: sannithiyan@hotmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிராத்தம்

– திரு **செவ்வேள்** அவர்கள் –

நமது தாய் தந்தையர் இறந்தபின் அவர்களின் நன்மை கருதிச் செய்யப்படும் அபரக் கிரியைகளுள் ஒன்று சிராத்தம் எனப்படும். சிரத்தையோடு செய்யப்படுவது சிராத்தம். இதனைத் திவசம், திதி என்றும் கூறலாம். சிராத்தம் செய்யப்பெறாதவர் நற்கதி அடையார். சிரத்தையின்றி மனதைப் பிறவிடயங்களிற் செலுத்திச் செய்யப்படுவது சிராத்தம் ஆகாது.

தந்தை தாயார் செய்த தீவினை நீங்குதற் பொருட்டுப் பிள்ளைகளாற் செய்யப்படும் சிராத்தமானது அவர்களைச் சென்றடையும் என்பது வள்ளுவரது கருத்துமாகும். கந்தபுராணம், காஞ்சிபுராணம், திருமந்திரம், திரிகடுகம், புறநானூறு, விநாயகபுராணம், பாரதம் போன்ற நூல்கள் சிராத்தம் செய்யவேண்டும் என்பதை உறுதிசெய்கின்றன.

சற்புத்திரரைக் கொண்டே சிராத்தம் செய்வித்தல் வேண்டும். சிராத்தம் செய்வதற்குப் புத்திரரே பூரண உரிமையுடையவர். "தென்புலத்தார் கடனை மாற்றுவது மகனின்றியில்லை" என்பது சிவஞான முனிவர் கருத்து. புத் என்னும் நரகத்தினின்றும் காப்பவர் புத்திரர். புத்திரர் இல்லாதவர் நற்கதி அடையமாட்டாரா? என்றால் அதற்கும் ஏற்றதான வழிவகைகள் உண்டு.

சிராத்த உண்மை தெரியாத நம்மவர் இதனாற் பயன் என்ன என்று விமர்சனம் செய்கின்றனர். இறந்தவர் எங்கே, எப்படிப் பிறந்தாலும் நாம் கொடுக்கும் தானத்தைச் சர்வ வல்லமையுடையவராய சிவபெருமான் தானேயேற்றுப் பிதிர்களைக் கொண்டு உரியவரிடம் தவறாது சேர்ப்பிக்கின்றார்.

"பிட்சை எடுத்தும் பிதிரரை அழை" என்பது கிராமிய பழமொழி. இப் பிதிரர் கோபம் இல்லாதவர். சிவத்தியானம் உள்ளவர். தூய்மையானவர், கடமை தவறாதவர்.

நாம் கொடுக்கும் தானப் பொருட்களை இப்பிதிரர் ஏற்று, இறந்தவர் தேவராயின் அமுதமாகவும், அசுரராயின் அவர்கள் புசிக்கும் உணவாயும், பசுவாயின் புல்லாயும், பாம்பாயின் வாயுவாகவும், அரக்கர் பசாசுவாயின் தசையாகவும், மானுடராயின் அன்னம் முதலியனவாயும் தானப் பொருளை அவர்களிடம் கொடுத்து மகிழ்விப்பார். இவர்களையே தென்புலத்தார் என வள்ளுவன் குறிப்பிட்டான். இவர்கள் மகலோகத்திற்கு மேலுள்ள சனலோகத்தில் இருப்பவர்கள். பூலோகம் முதலான மேல் ஏழு உலகங்களில் ஐந்தாவதாக உள்ளது சனலோகம். பூலோகத்திற்கும், யமலோகத்திற்கும் இடைத்தூரம் எண்பத்து ஆறாயிரம் காதம் என்கிறது கருடபுராணம். ஒரு காதம் என்பது 15 மைல். இறந்தவர்களுக்காக தவறாது செய்யவேண்டுவதால் இதனைக் கடன் என்று கூறுவர். புராண இதிகாசங்களிலும் இது வற்புறுத்தப்படுகிறது. பரதன், இரணியன், சடாயு, கும்பகர்ணன், குச்சகர், இராவணன் போன்றோரும் இக் கடனை மறக்கவில்லை.

இறந்தவர் என்ன மாதம், என்ன திதியில் இறந்தார் என்பதைக் கருத்திற்கொண்டு அத் திதியில் சிராத்தம் செய்வது உத்தமம். ஆபத்துக் காலத்தும், அக்கினி இல்லாவிடத்தும்,

*நீ வெற்றியடைவதை உன்னைத் தவிர வேறு யாராலும் தடுக்கமுடியாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிரகண காலத்தும், தீர்த்த யாத்திரை செய்யுமிடத்தும் ஆம சிராத்தம் செய்யலாம். சூத்திரர் முதலாயினோர் ஆம சிராத்தம் செய்யலாம். இயலாதவிடத்து இரணிய சிராத்தம் செய்யலாம். ஆமம் - பாகஞ் செய்யப்படாத அரிசி காய்கறி முதலியவைகளாற் செய்யப்படுவது. இரணியம் பொன் - காசு கொடுத்துச் செய்யப்படுவது. ஆசௌச தினத்தில் சிராத்தம் வந்தால் (தொடக்கு) நீங்கியபின் செய்யலாம். இராக் காலத்தும், இரண்டு சந்தியா காலத்திலும், பிராதக் காலத்திலும் செய்யலாகாது. ஆம சிராத்தம் கங்கவு காலத்திற் செய்து (மத்தியானம்) அபராணத்தில் போசனம் செய்தல் வேண்டும். சிராத்தத்திற்கு அரிசி, கோதுமை, பயறு, உளுந்து, எள், சர்க்கரை, வெல்லம், தேன், நல்லெண்ணெய், பசுப்பால், தயிர், சிகைக்காய், வாழைக்காய் - இலை, பழம் மா, பலா, தேங்காய், இளநீர், எலுமிச்சம்பழம், கீரை, வெற்றிலை, பாக்கு, ஏலம், கராம்பு முதலியனவற்றைப் பயன்படுத்தலாம். கடலை, துவரை, பயிற்றங்காய், முருங்கைக்காய், பூசணி, கத்தரி, வாழைப்பூ, வெண்காயம், எருமைப்பால் முதலியன ஆகாதவைகளாகும்.

வில்வம், துளசி, அறுகு, தாமரை, முல்லை என்பவற்றைச் சிராத்தத்திற் பயன்படுத்தலாம். மகிழ், தாழை, அலரி என்பவற்றைப் பயன்படுத்தலாகாது. சிராத்த தினத்தில் தயிர் கடைதல், நெல் குற்றுதல், பிட்சையிடல், எண்ணெய், நெய் முதலிய பொருள்களைக் கொடுத்தல் வாங்கல் ஆகாது. இத்தினத்தில் கோவிலில் அபிஷேகம் பூசை, திருவிளக்கேற்றுதல் வேண்டும். பசுக்களுக்கு புல் போடல் வேண்டும். சிராத்தம் செய்வோர் விரத நியமம் உடையவராய் இருத்தல் வேண்டும். சிராத்தம் செய்வதற்குப் பொருள் இல்லாதவர் காய், கனி, எள், கிழங்கு இவற்றையாவது சற்பாத்திரப் பிராமணருக்கு கொடுத்து நமஸ்காரம் செய்து, எள்ளுந் தண்ணீரும் இறைத்துத் தருப்பணம் செய்யலாம். அதுவும் இல்லாது விடின் பசுக்களுக்கு புல்லையாவது கொடுக்கலாம். எள்ளும் பருத்தியும் பிதிரர்களுக்கு மகிழ்ச்சியை உண்டாக்குவன.

இடிகொண் மாவினாற் பிண்டமே யாயினுமிடுக
இல்லையென்றிடல் எள்ளுடன் புனல் கையாலிறைக்க
வல்லபம் பெறாதாயின் ஆவினம் அருந்தப்
புல்லதாயினும் போடுக......

-திருச்செந்தூர்ப் புராணம்.

ஒருவர் இறந்த மாதம் தெரியாது. தினம் மாத்திரம் தெரிந்தால் ஆடி, மாசி, மார்கழி, புரட்டாதி மாதங்களில் வரும் தினத்தில் செய்யலாம். ஒன்றுந் தெரியாதாயின் இறப்பைக் கேள்விப்பட்ட மாத அமாவாசையிற் செய்யலாம். தாய், தந்தை இருவருக்கும் ஒரே நாளில் சிராத்தம் வந்தால் இரண்டையும் ஒன்றாகச் செய்யலாம்.

சிராத்தம் நடக்கும்போது வேதம், திருமுறை என்பன ஓதுதல் வேண்டும். சிராத்த முடிவில் குருவுக்கு தட்சணை கொடுத்து வழிபட்டு அன்புடன் அனுப்பி வைத்தல் இன்றியமையாதது. குருவானவர் போனபின்பு இடத்தை சுத்திசெய்து போசன விதிக்கமைய அதிதிகள் சுற்றத்தாருடன் உணவு அருந்த வேண்டும்.

*பொறுமையின் வழியே முயற்சித்தால் இழந்தது அனைத்தும் கிடைக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பை எங்கு செலுத்துவது?

**– திருமதி இராஜேஸ்வரி ஜெகானந்தகுரு** அவர்கள் –

பரமேஸ்வரனுக்கு பசுபதி என்றும் ஒரு பெயர் உண்டு. இங்கு பசு என்பது ஆன்மாக்களையும் பதி என்பது இறைவனையும் குறிக்கின்றது. இலை குழைகளை பசுமையாகக் கண்ட இடங்கள் எல்லாம் பசு மேய்வதற்கு ஓடுவதுபோல் நாமும் லௌகீக விடயங்களை நோக்கி ஓடிக்கொண்டிருக்கின்றோம். பசுவின் சொந்தக்காரன் பசுவை எங்கும் ஓடிவிடாது கட்டிவைத்திருப்பதுபோல் இறைவனும் எம்மைக் கட்டிப் போட்டிருக்கின்றான்.

ஆனால் இந்தக் கட்டு எமக்குத் தெரிவதில்லை. எம்மால் இலகுவில் புரிந்துகொள்ளக் கூடிய கட்டும் அல்ல இது. நாம் ஒரு காரியத்துக்காக எத்தனையோ முயற்சி செய்கின்றோம். காரியம் பலிதமாகவில்லை என்றால் என்ன சொல்கின்றோம்? எவ்வளவோ முயன்று விட்டேன் ஆனால் காரியம் இன்னும் சித்திக்கவில்லை எல்லாம் கர்ம பந்தம் என்று, கூறுகின்றோம். சமாதானம் சொல்லிக் கொள்கின்றோம். இந்தப் பந்தம்தான் இறைவன் எம்மைக் கட்டிப் போடும் கட்டுகள். நாம் முன்பு செய்த பூர்வ கர்மாவினால் எம்மை இறைவன் கட்டிப் போட்டுள்ளார். அதன்படி எமது கருமங்கள் நடந்தேறும். இதுதான் உண்மை. உண்மையிலும் உண்மை.

கயிற்றால் கட்டப்பட்ட பசுவுக்கு, தன் எஜமான்மேல் கோபம் வரத்தான் செய்யும். ஆனால் அதை அவிழ்த்துவிட்டால் என்ன நடக்கும். ஓடிச்சென்று அயல் தோட்டத்துள் புகுந்து மேய்ந்து தோட்டக்காரனிடம் மொத்து மொத்து என்று வாங்கிக் கட்டும் அந்தப் பசு.

இதேபோன்றதுதான் எமது நிலையும். எம்மையும் முன்வினை என்ற கர்மத்தினால் இறைவன் போட்டுக்கட்டாவிட்டால் எம் கதி அதோ கதிதான். தோல்வி துன்பம் என்ற ஒன்றுமே இல்லாமல் நாம் போடுகின்ற திட்டங்களுக்கும் ஆசைகளுக்கும் ஒரு முடிவே இராது. துன்பங்கள் தோல்விகள் எமக்கு ஏற்படுவதால்தான் நாம் இதுதான் எமக்கு பொசிப்பு என்று சிறிதளவு தன்னும் சிந்தித்து, சிறிது தன்னும் திருப்தி அடைய முடிகின்றது. இந்த நிலையும் இல்லையேல் எமது நிலையைக் கற்பனை செய்து பார்க்கவும் முடியாது.

எமது சகல ஆசைகளையும் செயற்படுத்துவதற்கு முடியாதபடிதான் எம்மைக் கர்மாவால் கட்டிப் போட்டுள்ளார் இறைவன்.

பசுவைக் கட்டிப்போடாவிட்டால் அது அயலவனது தோட்டத்துப் பயிரை அழிப்பதோடு தானும் அடி வாங்குகின்றது. அதேபோன்றுதான் நாமும் எமக்கு பந்தம் எனும் தளை இல்லையேல் நாம் எம்மையும் கெடுப்பதோடில்லாமல் உலகத்தையும் கெடுத்து விடுவோம். கர்மத்தால் கட்டுப்படுவதால்த்தான் நாம் எப்போதாவது தன்னும் இறைவனைச் சிந்திக்க முனைகின்றோம்.

ஒருவருக்கும் தீங்கு செய்யாமல் எமக்குப் பாவம் சேர்க்காமல் இருக்கும் பக்குவம் எமக்குக் கிடைக்கும்போதுதான் இறைவன் எமது தளையை அவிழ்த்து விடுவார்.

*மகிழ்ச்சியாய் நீ வீணாக்கிய தருணங்களெல்லாம் வீணானவையல்ல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கட்டு உள்ள வரையில்த்தான் நாம் வேறு சுவாமி வேறு, என்று பூசை எல்லாம் செய்கின்றோம். எப்போது எமது கட்டு அவிழ்க்கப்பட்டு விடுகின்றதோ அன்றே, நாமே அவன் என்று உணர்ந்து எம்முள் இறைவனைக் காணும் பக்குவம் எமக்குக் கிடைக்கப்பெறுகின்றோம். ஆசைகள் அகலும்போது கட்டும் அவிழ்கின்றது.

இதற்கெல்லாம் பரிகாரமாக ஈஸ்வரனில் அன்பு வைத்துவிட்டால் ஆனந்தம்தான். அதுவும் பேரானந்தம்தான்.

அன்பு செலுத்துவதில் உள்ள ஆனந்தம் வேறொன்றிலும் இல்லை. ஆனால் அந்த அன்பு யாரிடம் செலுத்தப்படுகின்றது என்பது முக்கியமானது. நாம் யாரிடம் அன்பு வைத்தாலும் என்றோ ஒருநாள் அவரைப் பிரியும்போது எமது மகிழ்ச்சி அகன்று எமக்குத் துன்பம் ஏற்படுகின்றது. அந்த அன்பு அத்தனையும் அழுகையாக மாறி விடுகின்றது. எனவே நாம் வைக்கும் அன்பை என்றுமே எம்மைவிட்டுப் பிரியாத சாஸ்வதமான இறைவனிடம் வைத்துவிட்டால் அந்த அன்பு எமக்கு என்றும் நிலையான ஆனந்தத்தை தந்து கொண்டிருக்கும். இந்த அன்பு முற்றுப் பெறும்போது எல்லாமே ஈஸ்வரனாக எமக்குத் தெரியவரும். அப்போது, ஈஸ்வரனின் கல்யாண குணங்களை யாமும் பெறும் நிலை எம்மை எட்டும்.

இதுவே எமது சமயத்தின் இலட்சியம்.

அன்பும் சிவமும் இரண்டு என்பர் அறிவிலார்
அன்பே சிவம் ஆவது யாரும் அறிந்திலார்
அன்பே சிவமாய் ஆவது ஆரும் அறிந்த பின்
அன்பே சிவமாய் அமர்ந்திருப்பாரே.

என்கிறது திருமந்திரம்.

## எல்லோரையும் காத்திட வேண்டும் வேல் முருகா

நாடிவரும் பக்தர்குறை தீர்த்திட வேண்டும் வேல் முருகா
நாளும் பொழுதும் நின்று அருள்தர வேண்டும் வேல் முருகா
தேடும் பொருள் நன்மையாய்க் கிடைத்திட வேண்டும் முருகா
தேவாதி தேவனே யாவரும் துதித்தருள் பெற வேண்டும் முருகா
வாடி மனம் நொந்து கொள்ளல் மறைய வேண்டும்
வடிவேலா கன்னியரும் கரை சேரவேண்டும்
ஓடியுன்னடி தேடி மணமக்களாய் வரவும் வேண்டும்
ஒரு குறையும் இல்லாது எவரையும் காத்திட வேண்டும்
வேல் முருகா சந்நிதி வேல் முருகா...

-சின்னப்பு தனபாலசிங்கம்-

*செயல் புரியாத மனிதனுக்கு தெய்வம் ஒருபோதும் உதவி செய்யாது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபெருமானின் திருவந்தாதி

– திரு முருகவே பரமநாதன் அவர்கள் –

திருமுறைகள் இறைவனது திருமேனியென்று ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் எழுதி வைத்துள்ளார். அவருடைய மாணவரான காசிவாசி செந்தில் நாதையர் திருமுறை வேதசாரம் என்பர். பேராசிரியர் அ.ச. ஞானசம்பந்தன் அவர்கள் மந்திரங்கள்தான் அவையென்கிறார். எனவே சைவசமயிகட்கு அவை உயிர் போன்றவை. உயிர்க்குயிரான இறைவன் ஆணையில் எழுந்த அருளிச் செயல்களே அவை. இவற்றை நாவலர் தவழ்ந்த யாழ்ப்பாணத்தார் சிலர் செத்தவீட்டுப்பாட்டு என நாக்கூசாமற் சொல்கிறார்கள். வட அமெரிக்கத் தமிழர்களிற் சைவர் Funneral Song எனக் கூறிக்கொள்வர். ஆலயங்களிற் பஞ்சபுராணம் ஓரங்கட்டப்பட்டு பஜனை புகுந்துவிட்டது. கேட்டால் அவை இசைக்கு வசையா என்பர். பூஜகர்களும் அதையே முன்னெடுத்துச் செல்வர். வன்மை பேணும் உலகில் வல்லாளர் பம்பரம் மண்ணிலும் ஆடும். சைவத்திருமுறைகளில் பதினோராந் திருமுறையில் நாற்பது பிரபந்தங்கள் வலம் வருகின்றன. ஆசிரியர்கள் பன்னிருவர் முதலமைந்தது இறைவன் சேரமானுக்கு எழுதிய திருமுகம் (கடிதம்) இத் தொகுப்பிலே 8 திருவந்தாதிகள் இடம்பெற்றுள்ளன.

01) அற்புதத் திரு அந்தாதி - காரைக்காலம்மையார்
02) பொன் வண்ணத்தந்தாதி - சேரமான் பெருமாள்
03) கைலை பாதி காளத்தி பாதி அந்தாதி - நக்கீரதேவர்
04) சிவபெருமான் திருவந்தாதி - பரணதேவர்
05) சிவபெருமான் திருவந்தாதி - கபில தேவர்
06) திருவேகம்பம் உடையார் திருவந்தாதி - பட்டினத்துப்பிள்ளையார்
07) திருத்தொண்டர் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பி
08) ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - மேலவர்

ஏழாவது பிரபந்தம் அறுபத்துமூவர் பற்றி எழுந்தது. தொகையடியார், தனியார் பற்றிப் பாடிய சுந்தரர் திருத்தொண்டத்தொகையை அடியொற்றிப் பாடப்பட்டது. எட்டாவது ஞானசம்பந்தர் மேல் எழுந்த பிரபந்தம். இவ்வரிசையிலே சிவன் என்ற திரு நாமத்தோடு வெளியான அந்தாதிகள் இரண்டு. பாடியவர்கள் பரணர், கபிலர். இவர்களிங்கே தேவர் எனப் பெயர் பெறுகிறார்கள். சங்ககாலப் புலவர்கள் கபிலர், பரணர் என இனங்காட்டப்படுகிறது. எனவே இப்பிரபந்த ஆசிரியர்கள் தேவர் என வேறுபடுத்தப்படுகின்றனர். நக்கீரரும் தேவரென அழைக்கப்படுகிறார். அவர் தந்தவை நன்முருகாற்றுப்படையுட்பட 10 பிரபந்தங்கள் ஆகும். ஒரு பாடலின் ஈறு (அந்தம்) அடுத்து வரும் செய்யுளின் துவக்கம் (ஆதி) ஆக அமைவது அந்தாதி எனப்படும். முதற் கவியின் ஈற்றில் உள்ள சீர், தொடை, எழுத்து, சொல், தொடர் அடுத்த பாடலின் ஆரம்பம் ஆவதுடன், முதற் பாடலின் துவக்கம், கடைசிப் பாடலின் முடிவாய் வரப் பாடல்கள் அமைய வேண்டும். நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில் முதலாம்,

*தூரப் பயணம் செய்பவன் பலவற்றையும் அறிவான்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இரண்டாம், மூன்றாம் திருவந்தாதிகள் நான்முகன் திருவந்தாதி இப்படியமைந்துள்ளன. நம்மாழ்வார் பாடிய திருவாய்மொழி 1000 பாசுரங்களும் அந்தாதித் தொடையாய் அமைந்துள்ளன. இறுதிப்பாடலின் இறுதியும், முதற்பாடலின் துவக்கமும் ஒன்றாய் வருவதும் மண்டலித்தல் எனப்படும். பூமாலை கட்டித் தொடுப்பதுபோல இப்பாமாலையமையும். பாம்பு தன் வாயுள் வாலை வைத்து வட்டமாய்க்கிடப்பது போன்றது இப்பிரபந்தம். இப்பாடல்கள் பக்தியும், கருத்தாழமும், பொருட்செறிவும், பக்திச்சுவையும் நிறைந்தவை. இறைவனோடு பாடுவோரை இசைவிப்பன கனிந்த தமிழ் நடையும், இனிந்த செய்யுளமைப்பும் கொண்டு புனித தோத்திரமாலையாய் அமைந்துள்ளன. யாரோ சில்லறைப் பேர்வழிகளின் தொடர்களையும் படிப்போர் இவற்றைச் சீண்டுவதே இல்லை. இனி அந்தாதியின் செவ்வி பற்றிச் சிந்திப்போம்.

இவற்றில் நக்கீரதேவர் நூறு செய்யுட்களும் பரணதேவர் நூற்றொரு செய்யுட்களும் பாடியுள்ளனர். இறுதிப்பாடல் நூற்பயன் (பலச்சுருதி) கூறுவன. மொழிவளம் நிறைந்த இப்பாசுரங்கள் படிப்போர் நெஞ்சை நெகிழவைப்பன.

வேதகாலத்தில் மனித வயது நூறு எனவும், நூற்றிருபது எனவும் வரையறை செய்யப்பட்டுள்ளது. தொண்டர் அடிப்பொடி வேதநூற் பிராயம் நூறு எனத் திருமாலையிற் தெரிவிக்கிறார். பாரதியும் எனக்கு வேண்டும் வரங்களை இசைப்பேன் கேளாய் கணபதி நீ மனத்திற் சலனமில்லாமல், மதியில் இருள்தோன்றாமல் நினைக்கும்பொழுது நின் மௌனநிலை வந்திடல் வேண்டும். கனக்குஞ் செல்வம் நூறு வயது இவையுந்தர நீ கடவாய் என விநாயகரிடம் விண்ணப்பிக்கிறார். காந்தி மகான் நூற்றிருபது ஆண்டு வாழ்வேனென்றார். அப்படி வாழவில்லை. சோதிடப் பாணியில் ஆறு திசைகள் ஒருவருக்கு அனுபவத்தில் வந்தால் 120 வருடங்களாகும். இவ்வுண்மைகளை மனதில் உள்வாங்கிக் கபிலர் பாடுகிறார்.

அன்று முதலாக நூறளவும் ஆண்டுகள் வாழ்ந்
தொன்றும் மனிதர் உயிரையுண் - டொன்றும்
மதியாத கூற்றுதைத்த சேவடியான் வாய்ந்த
மதியான் இடப்பாகம் மால்.

-சிவபெருமான் திருவந்தாதி - கபிலர்.

ஒரு வயதுமுதல் நூறு வயதுவரை வாழும் தகுதிவாய்ந்த மனித குலத்தின் உயிரை வாங்கும் காலனை (இயமனை) காலால் உதைத்தவன் சிவன். இந் நிகழ்வு மார்க்கண்டேயர் கதையில் வருகிறது. சிவன் பதினாறு வயது அளந்த மார்க்கண்டன்மீது, சிவனை மதியாது பாசக்கயிறு வீசியமைக்குத் தண்டனை அவனைக் காலால் உதைத்தமை. அப்படியான சிவனின் இடப்பாகத்தில் சக்தியாய் இருப்பவர் திருமால் என்கிறது இப்பாடல். அரியலாற் தேவியில்லை ஐயனாறனார்க்கே என அப்பரும் அருளிப்போந்தார்.

எரியலா லுருவ மில்லை ஏறலால் ஏறலில்லை
கரியலாற் போர்வை இல்லை காண்டகு சோதியார்க்குப்
பிரிவிலா அமரர் கூடிப் பெருந்தகைப் பிரானென் றேத்தும்
அரியலாற் றேவி யில்லை ஐயன்ஐயா றனார்க்கே.

-திருமுறை 4:40.5.

*நற்பண்பு தனக்குத்தானே பரிசாகும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரி- திருமால், ஐயாறு- ஒரு சிவத்தலம், கரி- யானை, எரி- நெருப்பு, ஏறு- எருத்துமாடு, இடபம்.

ஆழ்வார்களும் திருமாலைப் பாடும்போது வலது புறத்திலே சிவனையுடைய திருமாலேயெனப் பாடியுள்ளனர்.

என்திரு மார்பன் றன்னையென்
மலைமகள் கூறன் றன்னை
என்றுமென் நாமக ளையகம்
பால்கொண்ட நான்முகனை
நின்ற சதிபதி யைநிலங்
கீண்டெயில் மூன்றெரித்த
வென்று புலம்துரந் தவிசும்
பாளியைக் காணேனே.

-நம்மாழ்வார் திருவாய்மொழி 7:6:7.

இனி அந்தாதியில் வரும் இரண்டாம் பாடலைப் பார்க்கலாம்.

மாலை ஒருபால் மகிழ்ந்தானை வண்கொன்றை
மாலை ஒருபால் முடியானை - மாலை
ஒளியானை உத்தமனை உண்ணாநஞ் சுண்டற்
கொளியானை ஏத்தி உளம்.

-சிவபெருமான் திருவந்தாதி 02.

மால்+ஐ=மாலை- திருமாலை இடப்புறத்தில் விரும்பி வைத்திருப்பவனை மஞ்சள் நிறமான மாலையை முடியிலே அணிந்தவனை, மாலைநேரச் செவ்வான ஒளியையுடையவனை, உத்தமமான சிவனை, எவராலும் உண்ணமுடியாத நஞ்சை உண்டவனை, போற்றித் துதி மனமே என்பது இப்பாடலின் பொருள். உண்டற்கு ஒளியான்- உண்பதற்கு மறையாமல் முன்னின்றவன் ஏத்தி- துதிப்பாயாக, உளம்- மனமே (விளி)

வெண்பா என்னும் யாப்பிலே அமைந்த இவ்வந்தாதி கவிதா சாமர்த்தியம் வாய்ந்து காணப்படுகிறது. அவ்வண்ணமான பாடல் இது.

ஊரும் தொற்றியூர் உண்கலனும் வெண்தலையே
ஊரும் விடையொன் றுடைதோலே - ஊரும்
படநாகம் மட்டார் பணமாலை ஈதோ
படநாகம் அட்டார் பரிசு.

-பாடல் எண் 06.

இது ஒரு நிந்திப்பது போன்ற துதி- திருவொற்றியூர் சிவனின் இருப்பிடம். அது அவருக்குச் சொந்தம் இல்லை. ஏனெனில் அது ஈடு (ஒற்றி) பிடித்த (விற்றுக்கொள் ஒற்றிவையென மணிவாசகர் பாடுகிறார்) சாப்பிடும் பாத்திரம் (கலமோ) மண்டையோடு, ஏறிச் செல்லும் வாகனமோ எருத்துமாடு. உடுப்பும் புலித்தோல், யானைத்தோல், உடம்பிலே ஊர்ந்து

*குறைவாகப் பேசி நிறையப் பணி செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொண்டிருப்பது படமெடுத்தாடும் பாம்பு. மாலையுமோ தேன்நிறைந்த மலர்களால் ஆனது- ஆபரணமும் பாம்பேதான். ஊர், படநாகம், ஒற்றியூர் என்ற பிரயோகம் ஒரு இலக்கிய நயத்தைக் காட்டுகிறது.

தாமரைசேர் நான்முகற்கும் மாற்கும் அறிவரியார்
தாமரைசேர் பாம்பா - சடாமகுடர் - தாமரைசேர்
பாணியார் தீர்ந்தளிப்பார் பாரோம்பு நான்மறையார்
பாணியார் தீர்ந்தளிப்பர் பார்.

-பாடல் 78.

தாம் அரைசேர் பாம்பர்- தம் அரையில் பாம்பை நாணாக (அரைஞாண்கயிறு) அணிந்தவர். தாம் மரைசேர் பாணியார்- தாவும் மான் இருக்கும் கையை உடையவர் இவ்வாறான சிவன் நான் மறைகளையும் ஓதுபவர். அவர் இவ்வுலகைப் பாதுகாப்பவர்.

போரானை ஈருரிவை போர்த்தானை ஆயிரத்தெண்
பேரானை ஈருருவம் பெற்றானைப் - பேராநஞ்
சுண்டானை உத்தமனை உள்காதார்க் கெஞ்ஞான்றும்
உண்டாம்நா ளல்ல உயிர்.

-பாடல் 81

முப்புரங்களை எரிக்க மலையை வில்லாக்கிப் போர் செய்த ஈசனை, யானைத் தோலைப் போர்த்தவனை, 1008 திருநாமங்களை உடையவனை, இருவடிவம் தாங்கியவனை கொடிய நஞ்சை உண்டவனை - உயர்ந்தவனை, நெகிழ்ந்து உருகி வணங்காதவர்க்கு நிரந்தரமான வாழ்வமைதி கிட்டாது என்பது இதன் கருத்தாம். இவ்வந்தாதியின் இறுதிப் பாடலிலே- நூறு பசுவின் பாலைச் சொரிந்து, நூறு மலர்களால் அர்ச்சனை செய்து, நூறு தோத்திரங்களைச் சொல்வதைப் பார்க்கினும், அவனை உள்ளன்போடு நேசித்து, நினைந்துருகி ஒன்றிப்போடு பாடும் ஒரு பாட்டு மேலானது என்று நூற்பயன் சொல்லப்படுகிறது.

நூறான பயன்ஆட்டி நூறுமலர் சொரிந்து
நூறு நொடிவதனின் மிக்கதே - நூறா
உடையான் பரித்தவெரி உத்தமனை வெள்ளே(று)
உடையானைப் பாடலால் ஒன்று.

-பாட்டெண் 100.

சிவன் திருமாலை (சக்தியாக) இடப்பாகம் கொண்ட கதை பரணர் பாடிய அந்தாதியிலும் வருவதைப் பார்க்கலாம்.

மாயனை ஓர்பாகம் அமர்ந்தானை வானவரும்
மாயவரு மால்கடல்நஞ் சுண்டானை - மாய
வருவானை மாலை ஒளியானை வானின்
உருவானை ஏத்தி உணர்.

-சிவபெருமான் திருவந்தாதி 18.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறைவன் ஒருவனே, எனவே பல ஆயிரம் தெய்வத்தைக் கொண்டாடி அவலப்படாதீர். எனவே ஒரு பரம்பொருளான இறைவனைத் தவிர இரண்டாவது ஒன்றில்லை என்பதை உணர்வீராக. அப்பரம்பொருளே உற்றதுணையுமாவான். அவனே ஒருவனாய் உள்ளான். அவனை நாவிலே உரைத்து, பாம்பை அணிகலனாயும், மண்டையோட்டைப் பிச்சை எடுக்கும் பாத்திரமாயும் கொண்டவனை உள்ளத்தே இருத்தி வாழ்வீர்களாக.

ஒன்றுரைப்பீர் போலப் பல உரைத்திட் டோயாதே
ஒன்றுரைப்பீர் ஆயின் உறுதுணையாம் - ஒன்றுரைத்து
பேரரவம் பூண்டு பெருந்தலையில் உண்டுழலும்
பேரரவம் பூணும் பிரான்.

-சிவபெருமான் திருவந்தாதி 1. பரணர்.

மனம்போன எல்லைவரையும் இறைவனைச் சிந்தியுங்கள். அந்த அளவும் அவனைத் தொழுவீராயின் அவனும் அளவிலா அருள் பாலிப்பான். திருமிச்சூர் ஈசனை தொழுவார்க்கு தொழும்பனாய்த் திகழ்வானவன்.

செல்லுமளவும் சிதையாமற் சிந்திமின்
செல்லுமளவும் சிவனும் மைச் - செல்லும்
திருமீச்சூர்க் கேறேவே செங்கணே றூரும்
திருமீச்சூர் ஈசன் திறம்.

-சிவபெருமான் திருவந்தாதி 70. பரணர்.

இப்பாடல் உடன் முதலாந் திருவந்தாதியில் வரும் பாசுரத்தையும் பொருத்திப் பார்ப்போம்.

சொல்லுந் தனையும் தொழுமின் விழுமுடம்பு
செல்லுந் தனையுந் திருமாலை - நல்லிதழ்த்
தாமத்தால் வேள்வியால் தந்திரத்தால் மந்திரத்தால்
நாமத்தால் ஏத்துதிரேல் நன்று.

-திருகைலாயிரம் 215.

11ஆந் திருமுறை சிறந்த தோத்திரம் நிறைந்து காணப்பட்டாலும் உரையின்றி அப்பாடல்களைப் புரிவது மெத்தக் கடினம் என்பதை உணரமுடிகிறது என சைவ உலகம் தன் பிரபந்தங்களை மக்கள் முன்வைக்க உரையோடு வெளியிட முன்வரல் இக்காலகட்டத்தின் இன்றியமையாத தேவையாம்.

---

*மனதை அடக்குவதற்காக முதற்படி இதுதான். சிறிதுநேரம் அமர்ந்து மனத்தை அதன் போக்கிலேயே அலையவிடுங்கள். அது எப்போதும் குமுறிக் கிளம்பிய வண்ணமே உள்ளது. நீங்கள் பொறுமையாக அதை கவனிக்க மட்டுமே செய்யுங்கள். அறிவே வலிமை. மனம் என்ன செய்கிறது என்பதை அறியாமல் அதைக் கட்டுப்படுத்த முடியாது. கடிவாளத்தை விட்டுப்பிடியுங்கள். தீய எண்ணங்கள் பல அதில் எழலாம். நாள் செல்லச்செல்ல மனத்தின் வெறித்தனமான போக்கு குறைவதையும், அது மெல்ல மெல்ல அமைதி பெறுவதையும் காண்பீர்கள்.*

***-சுவாமி விவேகானந்தர்.***

***வியர்வை வர வேலை செய்தால் விரும்பியதைப் பெறலாம்.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சர்வமும் சர்வ வல்லமைகளும்

– திரு இராம ஜெயபாலன் அவர்கள் –

வலிமையான உடலும், வல்லமையான ஆற்றல்களுமே அரசர்கள் காலத்தில் ஆட்சி அதிகாரங்களைத் தீர்மானிக்கும் முக்கிய காரணிகளாக விளங்கி வந்தாலும், நல்லாட்சிகள் ஏற்பட்டு மக்களுக்கு அரசர்கள்மீது ஏற்பட்ட நன்மதிப்புக்கள் காரணமாக பரம்பரை ஆட்சிமுறைகள் ஏற்படக் காரணமாக அமைந்தன. தவிர மக்கள் அங்கிகாரங்கள் இருக்கும் அரசர்கள் ஆட்சியமைக்கும்போது வலிமையான உடல் மற்றும் வல்லமையான ஆற்றல் இல்லாத அரசர்களும் ஆட்சி அதிகாரங்களில் அமரும் வாய்ப்புக்களும் ஏற்பட்டும் இருக்கின்றன. அதாவது பட்டத்துக்குரிய இளவரசர்கள் சிறுவயதிலேயே முடிசூடிக்கொள்ள நேர்ந்தாலும் அவர்கள் பெரியோரை மதித்து நடந்தமையால் சிறப்பான ஆட்சிகளும் இடம்பெற்றிருக்கின்றன. தவிர அரசன் இல்லாமலேயே அரசனின் செருப்பே ஆட்சி செய்த வரலாறுகளும் இருக்கின்றன. இவ்வாறெல்லாம் இருந்தபோதும் அரசர்களின் உடல் ஊனங்களைக் காரணம் காட்டி, ஆட்சி மாற்றங்களும் புரட்சிகளும் ஏற்பட்டமையை மகாபாரதம் பதிவாக்கியுமுள்ளது.

எவ்வாறாயினும் வலிமைகளும், வல்லமைகளும் அரசர்கள் காலத்து வாழ்வு முறைகளில் முக்கிய பங்காற்றியிருந்தாலும், வல்லமைகள் எப்போதும் வலிமைகளில் மட்டும் தங்கியிருக்கவில்லை. உதாரணம் தாவரங்களின் வேர்கள் மிகவும் மென்மையானவை. ஆனாலும் அவற்றால் பெரிய பாறாங்கற்களையே புரட்டிவிடும் ஆற்றல் உடையவையாக திகழ்கின்றன. மேலும் வலிமை குறைந்த பல உயிரினங்கள் பல்வேறு வல்லமையான ஆற்றலை வெளிப் படுத்தக்கூடியதாக விளங்குகின்றன. இவ்வாறு உடல் வல்லமையைவிட மன வல்லமைகள் ஆற்றல்மிக்க சாதனைகளைப் படைக்கக்கூடியதாக இருப்பதால் வல்லமைகள் உடல் வலிமைகளால் மட்டுமல்ல மன வலிமைகளாலும், வல்லமைகள் சாத்தியப்படக்கூடியதாக நவீன காலங்களில் விளங்குகின்றது.

மேலும் வல்லமையென்பது உயிரினங்களுக்கு மட்டுமல்ல இயங்குகின்ற சடப்பொருள்களுக்கும் இருக்கின்றது. ஆனால் சக்திப் பரிமாற்றங்கள் இடம்பெறும் பொருள்களால் மட்டும்தான் இயங்கமுடியும். ஆனால் இயங்காத பொருள்களுக்கும் வலிமை இருக்கலாம். இயங்குகின்ற பொருளுக்கு மட்டும்தான் வல்லமைகள் உண்டு. முக்கியமாக உயிரினங்களுக்கான வல்லமையை அவை உண்ணும் உணவுகள்மூலம் பெற்றுக்கொள்கின்றன. மனிதர்கள் உண்ணும் உணவுகள் மற்றும் உடற்பயிற்சி, தியானம், கல்வி கேள்விகள், கலைப்பயிற்சிகள் போன்றவற்றாலும் பிறவிகளாலும் தெய்வ அனுக்கிரகங்களாலும் வல்லமைகளை பெறுகின்றார்கள்.

இந்தவகையில் ஒருவரின் வல்லமையை அவர் சார்ந்த அறங்களும் கட்டுப்படுத்துகின்றது. உதாரணம் வைத்தியர் ஒருவரது அறம், உயிர்களைக் காப்பதாகும். போர் வீரரது அறம் தனது நாட்டையும் மக்களையும் காப்பதற்காக, எதிரிகளுடன் போரிடுவதாகும். குற்றவாளிக்கு மரணதண்டனை வழங்கும் வீரரது கடமை, கொலை செய்வதாகும்.

*வேடிக்கைப் பேச்சில் வெளிவரும் உண்மைகள் பல.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அரசியல்வாதியின் வல்லமை அவருக்கு இருக்கும் மக்கள் செல்வாக்கைக் கொண்டே தீர்மானிக்கப்படுகின்றது. எனவே ஒருவரது வல்லமை அவர் தனது கைகள் கால்களைக் கொண்டு செய்யும் உடல் வல்லமைகள் போல் அறிவினால் செய்கின்ற வல்லமைகள் மற்றும் விஞ்ஞான மெய்ஞான ஆற்றல்களைக் கொண்டு செய்கின்ற வல்லமைகள், படைபலம், பாதுகாப்பு, எடுபிடிகள், ஏவல்களைக் கொண்டு செய்கின்ற வல்லமைகள் தவிர பொருளாதார வல்லமைகள் என பல்வேறு வல்லமைகளை மனிதர்கள் வெளிப்படுத்த இன்றைய அறிவியல் முன்னேற்றங்கள் மிக முக்கிய பங்காற்றுகின்றது.

இவ்வாறு தெய்வ சக்திகளுக்கு இருக்கும், அருள்புரியும் வல்லமைகளையும், பல்வேறு காரணிகள் தீர்மானிக்கின்றது. முக்கியமாக மனிதர்களது கர்மாக்கள் தவிர தெய்வ சக்திகளை மனிதர்கள் பாதுகாத்து அவைகளின் பெருமைகளை தக்க வைத்து கிரியைகள், வழிபாடுகள் அவற்றின் சக்திகளை அதிகப்படுத்துவதைப் பொறுத்தும் மேலும் தெய்வ சக்திகளுக்கு இருக்கும் பரிவார தெய்வங்கள் மற்றும் பாதுகாக்கும் தெய்வங்களின் அனுசரணையும் மூலவரான தெய்வத்தின் வல்லமைகளைத் தீர்மானிக்கின்றது. தவிர தெய்வங்களுக்கும் அவை சார்ந்த அறங்களும் இருக்கின்றது. இவ்வாறு தெய்வங்களுக்கு அரசியல்வாதிகளுக்கு இருப்பதுபோல் மக்கள் செல்வாக்கும் அவற்றின் வல்லமைகளைக் கட்டுப்படுத்துகின்றது.

அதாவது ஒருவர் எந்த முயற்சிகள் இல்லாது இருந்தாலும் அதிஷ்ட வாய்ப்புக்கள்மூலம் அவர்களுக்கு தெய்வ சக்திகள் அள்ளியள்ளிக் கொடுக்கும் அதே நேரம் ஒருவர் செய்யும் முயற்சியை இரட்டிப்பாகவும், பலமடங்கு பெருக்கியும், அருள்புரியக் கூடியதாக தெய்வ சக்திகளுக்கு வல்லமையை கர்மாக்கள் தீர்மானிக்கின்றது. சிலருக்கு பாதகமான கர்மாக்கள் இருந்தாலும் அவர்களைப் பாதுகாத்து துயர்களில் இருந்து மீட்டு அறிவுரைகள் வழங்கி முயற்சி செய்ய வைத்து பக்கபலமாக இருந்து துயர்களையும் இழப்புக்களையும் தாங்க வைத்தும் ஆறுதல்கள் சொல்லியும் ஆற்றுப்படுத்தியும் தெய்வ சக்திகள் அருள்புரிந்து அதன்மூலம் தமது வல்லமைகளையும் பெருக்கிக்கொள்கின்றது.

மேலும் தெய்வ சக்திகளுக்கு அருள்புரியும் வல்லமைகள் இருந்தபோதும், சிலரது கர்மாக்கள் குறுக்காக நின்று தெய்வசக்திகளின் அருட்பார்வை கிடைக்காது தடுத்து விடுகின்றது. இவ்வாறானவர்களுக்கு தன்னிடம் அருள் பெற்றவர்களிடம் இல்லாதவர்களுக்குக் கொடு என அறிவுரை வழங்கியும் சாதித்துக்கொள்கின்றது.

மேலும் தெய்வசக்திகளும் ஒரு அரசன் தனக்கு விசுவாசமான படைவீரர்களை தெரிவுசெய்ய மறைமுகமான சோதனைகள் செய்து தேர்ந்தெடுப்பதுபோல், தனக்கு நெருக்கமான பக்தர்களையும் பலவிதமான சோதனைகளைக் கொடுத்தும், தன்னைப் பற்றிப்பிடிக்க வைக்கின்றது. ஆனாலும் தெய்வ சக்திகள் யாருக்கும் தண்டனை வழங்குவது அவைகளது அறம் இல்லாவிட்டாலும் தெய்வசக்திகளின் அருட்பார்வை கிடைக்காததால் கர்மாக்கள் தமது கடமைகளை இலகுவாகச் செய்து முடித்துவிடுகின்றது.

எனவே மேலே பார்த்த அனைத்தும் வல்லமைபற்றிய தெளிவை ஏற்படுத்த மேலோட்டமாகச் சொல்லப்பட்ட கருத்துக்களாகும். இந்தக் கட்டுரையின் நோக்கம் சர்வ

*காலமும் நீரேற்றமும் யாருக்கும் காத்திராது.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வல்லமைபற்றிய ஆய்வாகும். மேலும் சர்வ வல்லமை என்பது படைப்புக்கள் அனைத்தும் இறைவன் செயலாக இருப்பதால் படைப்புக்கள் அனைத்தும் வெளிப்படுத்தும் வல்லமைகளுக்கு இறைவனே வித்திட்டமையால் விளைவுகளுக்கும் இறைவனே பொறுப்பாளியும் ஆகின்றான். மேலும் எல்லா மத சார்பு அறிவியல்கள் இறைவனின் சர்வ வல்லமை பற்றிப் பல்வேறு விதங்களாகப் பேசி இருந்தாலும், இறைவனை முழுக்க முழுக்க அறிவியல் ரீதியாக தூய வடிவில் ஆய்வு செய்வதே இந்தக் கட்டுரையின் நோக்கமாகும்.

இந்தவகையில் இயற்கையின் இயக்கங்களில் முக்கியமானது ஞாயிற்றுத்தொகுதியின் சீரான இயக்கங்கள். இவை மனிதனால் திட்டமிட்டு உருவாக்கப்பட்டவையல்ல. தானாக உருவாகியவை. ஆனாலும் இவற்றின் இயங்கியல் திட்டமிடப்பட்ட ஒழுங்கில் நடைபெறுவதால் இவற்றைத் திட்டமிட்ட ஒரு சக்தி இருக்கவேண்டும் என்ற அடிப்படையில் தமிழ்மொழியில் இறைவன் என்று பொதுப்பண்பில் பேரிடப்பட்டுள்ளது.

தவிர உயிரினங்கள் ஒவ்வொன்றும் இயங்கியல் நோக்கில் திட்டமிடப்பட்டு தாமாக உருவாகிப் பரிணாமமடைந்து தன்னியக்க முறையில் ஒரு ஒழுங்கில் இயங்கும் வண்ணம் படைக்கப்பட்டு இருக்கின்றது. ஆனால் மனிதர்கள் சிந்தனை ஆற்றல்களால் சக மனிதர்களின் அறிவில் ஆதிக்கம் செலுத்தும் வல்லமையால் காலத்துக்குக் காலம் உலக ஒழுங்குகள் மாற்றமடைந்து வந்துள்ளது. மனிதர்களின் அறிவியல் வல்லமைகள் புதிய விதி செய்யும் ஆற்றலுடையவை. உதாரணம் கால்மாக்ஸ் தனது சமவுடமைத் தத்துவத்தை உலகுக்கு முன்வைத்தமையால் கோடிக்கணக்கான மக்கள் மனங்களில் அவரது சிந்தனைகள் ஆதிக்கம் செலுத்தத் தொடங்கியது. முக்கியமாக அவர் ஒரு கடவுள் மறுப்பாளராக இனங்காணப்பட்டும் இருப்பதால் இறைவன் மனிதர்களின் இயக்கங்களை தீர்மானிக்கமுடியாது உள்ளன என்ற கேள்வி எழுகின்றது.

மனிதன் உணவை உண்டவுடன் அந்த உணவு தன்னியக்க முறையில் உள்ளுறுப்புக் களால் சமிபாடு அடைய வைத்து, இரத்தமாக உடல் முழுவதும் எடுத்துச் செல்ல தன்னியக்க முறையில் இதயம் இயங்குகின்றது. தவிர உடலுக்கு சக்தியின் பற்றாக்குறையேற்பட்டால் உடல் தன்னியக்க முறையில் செயற்பட்டு பசியென்னும் உணர்வை ஏற்படுத்தி எமது அறிவுக்கு தெரியப்படுத்துகின்றது. இவ்வாறு எமது உடலில் காயங்கள் ஏற்பட்டால் நோ மற்றும் வலிகள்மூலம் தன்னியக்க முறையில் தோலில் காணப்படும் உணர்வு நரம்புகள் மூலம் மூளைக்கு கடத்தி எமது அறிவுக்குத் தெரியவைக்கின்றது. இவ்வாறு உடல் தன்னியக்க முறையில் உணர்வுகளை எமது அறிவுக்குத் தெரியப்படுத்துவதன் முக்கிய நோக்கம் எமது உடல் பாதுகாக்கப்பட வேண்டும் என்பதாலாகும்.

மேலும் எமது உடலில் சக்தி அதிகமானால் காம உணர்வுகள் மூலம் இனத்தைப் பெருக்கவேண்டும் என்ற உந்துதலை எமது உடல் அறிவுக்கு தெரியப்படுத்துகின்றது. தவிர பிள்ளைகள் பிறந்துவிட்டால் அவற்றை பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வையும் உடல் மூளையில் உருவாகவும் செய்கின்றது. இவ்வாறு பசி மற்றும் நோ வலி போன்ற உணர்வுகள் எமது உடலைப் பாதுகாக்கவும், காமம் மற்றும் பாச உணர்வுகள் சந்ததிகளைக் காக்கவேண்டும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பதற்காகவும் இயற்கையாய் உருவான உணர்வுகள் என்பதாலும் இயற்கைக்கதிபதி இறைவன் என்பதாலும் இறைவனால் திட்டமிடப்பட்ட இந்த உணர்வுகளின் பரிணாமம்தான் அறிவு என்பது தெளிவாகின்றது.

இந்த உணர்வுகள் முக்கியமாக தம்மை பாதுகாத்து தமது சந்ததிகளைப் பெருக்கி அவற்றையும் பாதுகாக்க வேண்டும் என்ற உணர்வுகள் மனிதர்களுக்கு மட்டுமே உரியவையல்ல. தாவரங்களில்கூட அவை தம்மை பாதுகாத்துக்கொள்ள வேர்களை நீரைநோக்கி வளரச் செய்யவும், கிளைகளை சூரிய ஒளியைநோக்கி வளரச்செய்வதும் முக்கியமானவை. தவிர மகரந்தச்சேர்க்கை மூலம் இனவிருத்தி செய்ய மற்றைய உயிர்களை கவர்வதற்காக அழகிய பூக்களைப் பூப்பதும், தனது இனங்களை பரவலடையச் செய்ய உயிரினங்களை கவர சுவையான கனிகளை உண்டாக்குவதும் இயற்கையின் இயக்கம் கருதி இறைவனால் திட்டமிடப்பட்டவையே என்பது எந்தச் சந்தேகத்துக்கும் இடமின்றி நிரூபணமாகின்றது. இவ்வாறு எல்லா உயிரினங்களுக்கும் தம்மைப் பாதுகாக்கவும் தம் இனத்தை விருத்தி செய்யவும் பாதுகாக்கவும் உணர்வுகள் வாயிலாக இயற்கையே தூண்டுதல்களையும் செய்கின்றது.

(தொடரும்...

## அலங்காரக் கந்தன்!

**பல்லவி**

கல்லும் கசிந்துருகக் கவி பாடுவேன்! - நல்லைக்
கந்தன் புகழ்பாடிக் காலமெல்லாம் களிப்பேன்!

(கல்லும்)

**அனுபல்லவி**

வல்லமை தந்து எம்மை வாழ வைக்கும் - அவனை
வாயாரப் பாடி நிதம் வணங்கி நிற்பேன்!

(கல்லும்)

**சரணம்**

பல்லோரும் புகழ்ந்தேத்தும் பார்வதியின் மைந்தன்! - எங்கள்
பைந்தமிழ்க் கடவுளாய் விளங்கி நிற்கும் வேலன்!
நல்லூரில் உறையும் அவன், நமக்குக் காவலன்! - என்றும்
நம்பித் தொழுவோர்க்கு நலங்களைத் தருபவன்!

(கல்லும்)

தொல்புகழ் மிக்க நல்லையில் உறைபவன்! - தன்னைத்
துணை என வருவோர்க்கு அருள் மழை பொழிபவன்!
அல்லல்களைக் களைந்து ஆனந்தம் தருபவன்! - இங்கு
"அலங்காரக் கந்தன்" என்றே அகிலமும் அறிந்தவன்!

(கல்லும்)

-கி. குலசேகரன்-

*மனதின் சக்தியே எண்ணத்தின் சக்தி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குமரனிடம் அருள்பெற்ற குமரகுருபரர்

– திரு சிவபாதம் அவர்கள் –

இயற்கையின் இனிய நாதமாய் இறை அருள் பரந்துள்ள இப் புவிதனில் இறை அருளை உணர சிறுவயது முதல் இறை பக்தி, இறை நம்பிக்கை ஆகியவற்றை வளர்த்தல் அவசியம். சிறுவயதில் இறை அருள் பெற்ற சிறுவர்களில் குமரகுருபரரும் ஒருவர்.

நெல்லை சீமையில் ஸ்ரீ வைகுண்டம் என்ற ஊரில் சில நூற்றாண்டுகளுக்கு முன் பிறந்தவர் குமரகுருபரர். அவர் ஐந்து வயதுவரை பேசவில்லை. அதனால் திருச்செந்தூர் செந்தில் ஆண்டவர் கோவிலில் அவரது பெற்றோர் 48 நாட்கள் விரதம் இருந்தனர். ஒருநாள் இரவு கனவில் குமரப்பெருமான் தோன்றி குழந்தையின் நாக்கின்மீது வேலினால் சடாட்சரத்தை எழுதினார். குழந்தை தன் தாய் தந்தையரை அழைத்து முருகனின் அருளைக் கூறியது. தாய் தந்தையர் வியந்து முருகனின் அருளைப் போற்றி துதித்தனர். அன்றிலிருந்து குமரகுருபரர் “பூமேவு...” என்று தொடங்கி 244 அடிகள் கொண்ட 122 தண்ணிகளில் கலிவெண்பா பாடினார்.

மதுரை மன்னன் திருமலை நாயக்கரின் கனவில் மீனாட்சி அம்மன் தோன்றி மன்னா செல்வன் குமரகுருபரன் எம்மைப்பற்றி “பிள்ளைத்தமிழ்” பாடியிருக்கின்றான். திருப்பரங்குன்றத்தில் இருக்கும் அவனை இங்கு அழைத்துவந்து எம் ஆலயத்தில் அந்த நூலை அரங்கேற்று என்று கூறி மறைந்தாள். மன்னர் மிகவும் மகிழ்ந்து திருப்பரங்குன்றம் கோயிலுக்குச் சென்றார். அங்கு குமரகுருபரனை கண்டு சுவாமி தாங்கள் அங்கயற்கன்னியின் திருவருள் பெற்றவர். தங்களை மதுரைக்கு அழைத்து வருமாறு அம்மை பணித்துள்ளாள். எழுந்தருள வேண்டும் என வேண்டினார். எல்லாம் இறைவனின் விருப்பம் என கூறி மன்னருடன் சென்றார். மன்னர் குமரகுருபரரையும் அவர் இயற்றிய நூலையும் யானைமேல் ஏற்றி மதுரை நகரை வலம் வந்தார். பின்னர் கோவிலில் நூலை அரங்கேற்றினார். அப்போது மீனாட்சி அம்மை ஒரு சிறுமியாக வந்து மன்னரின் மடியில் அமர்ந்தாள். குமரகுருபரரின் பாடல்களைக் கேட்டு ரசித்து தம் கழுத்தில் இருந்த மணிமாலையை அவருக்கு அணிவித்து மறைந்தாள். வந்த சிறுமி மீனாட்சிதேவி என்பதை அறிந்த குமரகுருபரர் வியந்து தாயே மீனாட்சி தாங்களே இந்த எளியவனின் பாடலைக் கேட்க வந்தீரகளோ என்னே தங்கள் கருணை என போற்றினார்.

பின் ஒருநாள் குமரகுருபரர் கோவிலில் தேவாதிதேவா அடியேனுக்கு ஒரு ஞானாசிரியரை காட்டி அருளவேண்டும் என வேண்டினார். அப்போது இறைவன் வாக்கு ஒலித்தது. நீ வட திசை நோக்கிப் பயணம் செய்யும்போது யாரிடம் உன் வாக்கு தடைப்படுகிறதோ அவரே உன் குரு என ஒலித்து நின்றது.

தருமபுர ஆதீன கர்த்தா ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிகர் கேட்ட பெரியபுராணத்து “ஐந்து பேர் அறிவும் கண்களே கொள்ள” என்ற விருத்தத்தையும் குமரகுருபரர் விளக்கும்போது அவரது வாக்கு தடைப்பட்டது. அதனால் அவர் மாசிலாமணி தேசிகரிடமே ஞானதீட்சை பெற்றார். குருவின் ஆணைப்படி குமரகுருபரர் பல சிவத்தலங்களுக்குச் சென்று ஈசனின்

*உன் பணியை முடிந்தவரை சிறப்பாகச் செய்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெருமைகளைப் பாடி மகிழ்ந்தார். பிறரையும் மகிழ்வித்தார். ஒருநாள் குமரகுருபரர் கனவில் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமி தோன்றி தம்மைப் பாடுமாறு பணித்தார். அவரது அருளால் முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் என்ற காவியத்தை இயற்றினார்.

இவ்வாறு பல தலங்களுக்குச் சென்ற பிறகு மீண்டும் அவர் தமது குருநாதரிடம் சென்றார். குருநாதா தங்கள் அருளால் பல தலங்களையும் தரிசித்து பாமாலைகள் பாடினேன். இப்போது பண்டார மும்மணிக்கோவை" என்ற தங்கள் புகழ் பாடும் நூலை இயற்றியுள்ளேன் ஏற்றருள வேண்டும் சுவாமி என வேண்டினார். குருவும் செந்தில் ஆண்டவன் திருவருளே உனது பாடல்களாக வெளிவருகின்றன. "மகனே நீ காசி சென்று அங்கே சைவம் தழைக்க பாடுபடு" என்றார். குமரகுருபரரும் தங்கள் சித்தம் சுவாமி என்றார். காசியில் அப்போதைய அரசன் ஒரு சுல்தான். அவன் குமரகுருபரரின் பெருமையை அறியாதவன். அவனை காண விழைந்த குமரகுருபரரை அலட்சியப்படுத்தினான். யார் அந்த சாமியார்? அவர் என்ன சிங்கத்திலா வருகின்றார்? அவரை எல்லாம் நான் சந்திக்க முடியாது. நான் பேசும் மொழிகூட அவருக்குத் தெரியாதே என்று கேலி செய்தான். அதைக் கேள்விப்பட்ட குமரகுருபரர் சரஸ்வதிதேவியை துதித்தார். சரஸ்வதிதேவி காட்சி அளித்தாள். தேவியின் அருளால் "சகலகலா வல்லிமாலை"யை அப்போது இயற்றினார். பின்னர் சரஸ்வதி தேவியிடம் தாயே! என் குருவின் கட்டளையை நிறைவேற்ற தாங்கள் அருளவேண்டும் என வேண்டினார். தாயும் மகிழ்ந்து மக்கள் கல்வியறிவும் ஞானமும் பெற உனது இந்தப் பாடல்கள் வழிவகுக்கும் என அருளினார். சரஸ்வதிதேவியின் அருளால் இந்தி மொழியையும் அறிந்த குமரகுருபரர் தம் சக்தியால் ஒரு சிங்கத்தின்மீது அமர்ந்து சுல்தானிடம் சென்றார். அதனைக் கண்டு பயந்த சுல்தான் சுவாமி அறியாமையால் தங்களை அலட்சியம் செய்துவிட்டேன். தங்களுக்கு நான் என்ன செய்ய வேண்டும்? என்று கேட்டான். குமரகுருபரரும் மண்ணா தருமை ஆதீனத்துக்காக காசியில் ஒரு மடம் அமைத்து சைவம் பரவ வேண்டியவற்றை செய்து தரவேண்டும் எனக் கேட்டார். அப்படியே ஆகட்டும் என்று கூறி சுல்தான் எல்லா ஒழுங்குகளையும் செய்தான்.

இவ்வாறாக பல மடங்களை நிறுவிய குமரகுருபரர் கடைசியில் ஸ்ரீ காசி விஸ்வநாதரின் திருவடியை அடைந்தார். எனவே சிறு பிள்ளைப் பிராயத்திலேயே இறை பக்தியை வளர்க்க வேண்டும். குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லிமாலை பாடல்களை தினமும் பாடும் மக்கள் கல்வியறிவும், ஞானமும் பெற்று சரஸ்வதி தேவியின் திருவருளும் குருவருளும் கிடைக்கப்பெறுவார்கள்.

---

*ஒவ்வொருவரின் மனமும் ஏதோ சில வேளைகளில் ஒருமுகப்படவே செய்கிறது. நாம் நேசிக்கும் பொருட்களில் நமது மனத்தை ஒருமுகப்படுத்துகிறோம். நாம் மனத்தை ஒருமுகப்படுத்தும் பொருட்களை நேசிக்கிறோம். இனிய இசையைக் கேட்கும்போது மனம் அதில் லயிக்கிறது. அதிலிருந்து மனத்தை பிரிக்கவே முடிவதில்லை. இத்தகைய மன ஒருமைப்பாட்டில் உள்ள பிரச்சினை இதுதான். நாம் மனத்தை அடக்குவதில்லை. மனம் நம்மை அடக்கி ஆள்கிறது. நமக்கு வெளியிலுள்ள ஏதோ ஒரு பொருள் நமது மனத்தை தன்னிடம் இழுத்து, அது விரும்பும்வரை தன்னிடமே வைத்துக்கொள்கிறது.*

***-சுவாமி விவேகானந்தர்-***

***நம்பிக்கை இல்லாத இடத்தில் அன்பு இருக்காது.***



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நித்திய அன்னப்பணிக்கு உதவிபுரிந்தோர் விபரம் (தொடர்ச்சி)

| | | |
|---|---|---|
| சிவா நறுமணப்பூங்கா | யாழ்ப்பாணம் | 1மூடை அரிசி |
| கா. தயாபரன் | கொழும்பு | 3மூடை அரிசி |
| K.V. துரைசாமி நினைவாக | மயிலிட்டி | 1000. 00 |
| சி. பகீரதன் | கனடா | 5000. 00 |
| கா. விஜயசுரேஸ் | சுவிஸ் | 100000. 00 |
| இ. சிவராஜா (இலங்கை வங்கி) | கரவெட்டி (கல்விப்பணி - மாதாந்தம்) | 15000. 00 |
| தி. சசி | பூநகரி | 1000. 00 |
| நி. நிகாஸ் | கரவெட்டி கிழக்கு | 1000. 00 |
| கந்தசாமி நினைவாக | நவாலி | 1000. 00 |
| திரு சபாநாதன் | சுதுமலை | 1000. 00 |
| கௌசிகன் சின்மயா | லண்டன் | 1000. 00 |
| உ. பேரானந்தம் | தெல்லிப்பழை | 2500. 00 |
| திவாகரன் குகராம் | சுன்னாகம் | 5000. 00 |
| சபா ரேடேர்ஸ் | அச்சுவேலி | 1மூடை அரிசி |
| திரு தில்லையம்பலம் குடும்பம், கியூபா குடும்பம் | கனடா | 5000. 00 |
| மகாமூர்த்தி ஆதீஸ் | பரந்தன் | 5000. 00 |
| S. சண்முகராஜா | கோண்டாவில் | 2000. 00 |
| கா. மயூரன், கா. துஷ்யந்தன் | தும்பளை | 2000. 00 |
| பா. பிரவீனன் | உடுவில் | 1000. 00 |
| P. சுரேஷ்கண்ணா | மாலிசந்தி | 5000. 00 |
| வே. காசிப்பிள்ளை, ந. பொன்னையா நினைவாக | வல்வெட்டி | 1500. 00 |
| சு. மகேஸ்வரன் மாரியம்மன் மோட்டோர்ஸ் | கோப்பாய் | மரக்கறி, தேங்காய், அரிசி |
| திருமதி ரட்ணேஸ்வரன் | கனடா | 18000. 00 |
| கு. ஸ்கந்தபாபு, ஸ். ரமநீதன் | நெல்லியடி | 5000. 00 |
| வே. தெய்வானை | உடுப்பிட்டி | 5000. 00 |
| திருமதி கருணாநிதி | நல்லூர் | 4புட்டி அரிசி |
| ம. கருணாநிதி | நல்லூர் | 10000. 00 |
| கி. கஸ்தூரி (பிரான்ஸ்) | வல்வெட்டித்துறை | 10000. 00 |
| K. தங்கராஜா | நல்லூர் | 500. 00 |
| கோ. சஷ்டிகுமரன் | புத்தூர் | 2000. 00 |
| அகல்யா | சுன்னாகம் | 1000. 00 |
| ம. பிறேம்குமார் | மட்டக்களப்பு | 8000. 00 |
| க. மனோன்மணி | கரவெட்டி | 1000. 00 |
| வி. ஜெகதீஸ்வரி | அளவெட்டி | 3000. 00 |

*பயணம் பொறுமையைக் கற்றுத் தரும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| செ. கேசானா | நாச்சிமார் கோவிலடி | 1000. 00 |
| ச. கௌசிகன் | லண்டன் | 1000. 00 |
| ஆ. விக்னேஸ்வரன் | ஊரிக்காடு | 5000. 00 |
| ந. தெய்வேந்திரராஜா | வல்வெட்டி | 3000. 00 |
| ந. விநாயகமூர்த்தி | வல்வெட்டித்துறை | 1000. 00 |
| மு. செந்திராசா | கரவெட்டி | 6000. 00 |
| சி. கருணியன் | ஏழாலை | 1000. 00 |
| K. ஜெயமோகன் | கைதடி | 5000. 00 |
| திரு வேலாயுதம் குடும்பம் | வட்டுக்கோட்டை | 1000. 00 |
| ஜெ. நிதுஷா | இணுவில் | 1000. 00 |
| கு. ஜெனிவன் | இருபாலை | 3000. 00 |
| து. ருத்விகன் | பண்டத்தரிப்பு | 5000. 00 |
| R. குணேஸ்வரன் | சுன்னாகம் | 1000. 00 |
| திரு ஸ்ரீரங்கன் | கனடா 40L தே.எண்ணெய், 100 ரின்பால் | |
| திரு வேலாயுதம் குடும்பம் | யாழ்ப்பாணம் | 5000. 00 |
| திரு ஜெகதீசன் மூலம், D. சுதர்சன் | மயிலியதனை (கனடா) | 15000. 00 |
| S. சௌமியன், S. சயிந்தவி | மீசாலை | 6000. 00 |
| செ. சர்வானந்தன் | அரியாலை | மரக்கறி, 1புட்டி அரிசி |
| கி. வள்ளியம்மா | கரணவாய் | 1000. 00 |
| ஜெ. ஜெயதீபன், ஜெ. றட்லி | லண்டன் | 5000. 00 |
| காசிலிங்கம் நினைவாக | வண்ணார்பண்ணை | 10000. 00 |
| ஸ்ரீ. பவானி | கனடா | 5000. 00 |
| கோ. மோனீஸ் | மானிப்பாய் | 1000. 00 |
| ந. சோதிசொரூபன் | மாவிட்டபுரம் | 2000. 00 |
| ந. அபிஷேக் | இணுவில் | 20000. 00 |
| சா. தனுயன் | ஊரெழு | 1000. 00 |
| சா. துவியன் | ஊரெழு | 1000. 00 |
| சி. தினேஸ் | நல்லூர் | 3000. 00 |
| க. கலாவதி | மட்டுவில் | 2000. 00 |
| நிமலன் சம்பூரணி | லண்டன் | 10000. 00 |
| இ. விக்னராஜ் | உரும்பராய் | 1000. 00 |
| வ.சி. கணபதிப்பிள்ளை | ஆவரங்கால் | 2000. 00 |
| வே. கெங்காசுதன் | கனடா | 1000. 00 |
| S. மாணிக்கம் | சுழிபுரம் | 6000. 00 |
| ஸ்ரீ. சுமதி | கனடா | 10000. 00 |
| திரு ஜீவகுமார் குடும்பம் | மானிப்பாய் | 3000. 00 |
| முருகன் அடியார் | இணுவில் | 5000. 00 |
| Dr பொ. தர்மராஜசிங்கம் | தெல்லிப்பழை | 50000. 00 |

*பயணங்கள் மனதை விசாலமாக்கும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| | | |
|---|---|---|
| ஸ்ரீ. மோகன்ராஜ் | கண்டி | 500. 00 |
| க. மாம்பழம் | நவிண்டில் | 1000. 00 |
| செ. செந்தூரன் | வட்டுக்கோட்டை | 1500. 00 |
| சி. கர்ணிகா | சுவிஸ் | 5000. 00 |
| முரளி ஹரிகரன் | கனடா | 25000. 00 |
| சி. சரோஜினிதேவி | திருகோணமலை | 5000. 00 |
| சி. அபயன் | கந்தர்மடம் | 2000. 00 |
| ப. யோகமங்களம் | இடைக்காடு | 10000. 00 |
| ரா. செந்தில்வாணி | கனடா | 15000. 00 |
| நா. நவரட்ணம் | யாழ்ப்பாணம் | 5புட்டி அரிசி, பருப்பு, 1000. 00 |
| S. கிருஷிகன் | உடுப்பிட்டி | 1000. 00 |
| கு. நாகேஸ்வரி | வட்டுக்கோட்டை | 2புட்டி அரிசி |
| R. நிஷாந் | பிரான்ஸ் | 1000. 00 |
| N. கௌசித் | தாவடி | 23000. 00 |
| R. நிருஷன் | சுவிஸ் | 1000. 00 |
| தெ. விநாயகநாதன் | பருத்தித்துறை | 1000. 00 |
| சு. முத்துலிங்கம் | கோண்டாவில் | 5000. 00 |
| அ. அக்சரா | பரந்தன் | 5000. 00 |
| ச. பாலமுரளி | இணுவில் | 1000. 00 |
| க. ஜெகதீஸ்வரன் | ஜேர்மன் | 23000. 00 |
| திரு கோகுலவாசன் | சரசாலை | 500. 00 |
| R. சிவாஞ்சலி | மட்டக்களப்பு | 500. 00 |
| த. நவரூபினி | மட்டக்களப்பு | 500. 00 |
| திரு கனகரத்தினம் குடும்பம் | சித்தங்கேணி | 2000. 00 |
| த. கமலாதேவி | சித்தங்கேணி | 2000. 00 |
| திரு கிருபாசன் குடும்பம் | கொலன்ட் | 23000. 00 |
| அ. குமாரவேல் ஆசிரியர் | வட்டுக்கோட்டை | 10000. 00 |
| ஆ. விஜயானந்தன் | சுதுமலை | 5000. 00 |
| ரிசிக்கா ரிசிகேஸ் | உரும்பராய் | 3000. 00 |
| க. நாகரத்தினம் | சாவகச்சேரி | 1000. 00 |
| சோ. சோமித்ரா | நாச்சிமார் கோவிலடி | 2000. 00 |
| சி. பாக்கியம் | ஏழாலை | 1000. 00 |
| Dr K. தர்மலிங்கம் | நீர்வேலி | 1500. 00 |
| T. ராஜராஜன் | கண்டி | 800. 00 |
| சி. மங்கையற்கரசி | நாவற்குழி | 5000. 00 |
| மயூரன் தர்சினி | கொடிகாமம் | முதியோர்களுக்கான உடுபுடவை |
| உ. அனு | அவுஸ்திரேலியா | 5000. 00 |

(தொடரும்...

*அன்புள்ள குணம் அலையில்லாத நதி.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ப் பெண் கவியரசிகள்

*(தொடர்ச்சி...*

– திரு இரா. செல்வவடிவேல் அவர்கள் –

## 09) நைடதத்தின் நயங்காட்டிய நற்றமிழ்ச் செல்வி

"ஆம் உமக்குத் தகுந்த பரிசு இதுவே. போதிய கல்விப் பயிற்சியின்றிப் புலவர் பட்டம் சூட்டிக்கொண்டு வருவோர்க்கு என்னால் தரப்படும் பரிசு இத் தலைக்குட்டே. அதில் ஒன்றும் இதில் ஒன்றுமாக இரண்டொரு நூல்களை கற்றுவிடுவதனால், எவரும் கற்றவர் குழாத்துள் ஒருவராக கணிக்கப்படமாட்டார். நுண்ணுணர்வு உடையராய், ஆன்ற ஆராய்ச்சியோடு ஐயம் திரிபு அற நூல் பல கற்று புலமை நிரம்பப் பெற்றோரே, கற்றார் எனும் பெயருக்கு உரியராவர். கல்வி கேள்விகளில் வல்லுநராய், படிக்கும்தோறும் புதிய புதிய கருத்துக்களைப் புலப்படுத்துவதாயும் படிப்போர் கேட்போர்களின் நெஞ்சை அள்ளுமாறு சொல் நயமும் பொருள் நயமும் பொருந்தியதாகவும் விளங்கும் பா இயற்றும் ஆற்றல் வாய்ந்தவராய் உள்ளவர்களே யாவராலும் போற்றத்தகும் புலவர் பெருமக்களாவர். அத்தகைய நல்லிசைப் புலவர்களை அவர்கள் வேண்டும் பொருளைத் தந்து மகிழ்விப்பதே எம்போன்றார் கடமை".

"அங்ஙனமின்றி அரைகுறைக் கவிஞரைப் பொருள் ஈந்து ஊக்கின் நாட்டில் கல்வியின் தரம் குறையும். குறை கல்வியாளர், மேலும் கற்க மனங்கொள்ளாது தன்னை மயிலாகப் பாவித்து சிறகு விரித்து ஆடும் வான்கோழி போல, பெரும் புலவராகத் தம்மை மதித்துத் தருக்குற்றுத் திரிவர். நிரம்பிய கல்விச் செல்வமுடைய புலவர்கள் நன்மதிப்பு இழந்து வருந்துவதற்கும் இச்செயல் காரணமாகும். ஆதலின், நீரும் நல்லாசிரியரையடைந்து கற்று, புலமை மிக்கவராய் வரின் பரிசில் பெற்றுப் பெருமை பெறுவீர். இனி, சொல்வீராக".

தம் வினாவிற்குத் தக்க விடை இறுக்க அறியாத புலவர்களைத் தலையில் குட்டி, இங்ஙனம் அறிவுறுத்தி அனுப்புவார் அதிவீரராம பாண்டியர். பள்ளிப் பிள்ளைகளின் இச் செயலை மேற்கொண்டிருந்த அவர் "பிள்ளைப் பாண்டியன்" ஆனார். தமிழ்நாட்டுப் பகுதிகள் மூன்றினுள் ஒன்றாகிய பாண்டிய நாட்டை ஆண்டு வந்த பாண்டிய மன்னர் வழிவந்த ஓர் சிற்றரசர் அவர். கருவூரில் இருந்து அரசு புரிந்த செங்கோல் வேந்தர். நிரம்ப அழகிய தேசிகர் என்னும் பெரியாரிடத்து இலக்கிய இலக்கணங்களைக் கற்றுப் பெரும் புலமை வாய்ந்தவர். அணிபெறச் செய்யுள் செய்வதில் வல்லவர். வடமொழிப் புலமையும் நிரம்பப் பெற்றவர். தக்க புலவர்களுக்குப் பொருள் வேண்டுவன விருப்புடன் அளிக்கும் இயல்பினர். போலிப் புலவர்களைத் தலையில் குட்டுவதை வேடிக்கையாகக் கொண்ட பிள்ளைத் தன்மையர்.

ஏனைய புலவர்கள் வியப்புக்கொள்ளுமாறு தம் புலமை தோன்ற ஓர் காவியம் இயற்ற எண்ணினார் அதிவீரராமர். "நைடதம் புலவர்க்கு ஔடதம்" எனப் புகழ்பாடும் நைட தத்தை எழுதத் தொடங்கினார். நள தமயந்தியார் கதையைக் கூறுவது அந்நூல், கதைகளில் அமைக்கப்படுவனவாகிய ஒன்பான் சுவைகளில், அதிவீரராமருக்கு இன்பச் சுவையில் விருப்பம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதிகம். ஆகவே நைடதத்தின் கதாநாயகர்களாகிய நளன் தமயந்தி இவர்களின் எழில் நலனைச் சிறப்பிக்கும் வாயிலாக இன்பச் சுவையை அள்ளிப் பொழியலானார். பாதி நூல் ஆயிற்று. உடனே அவர்க்கு அந்நூலைப் பற்றிய பிறர்கொள்கையை அறிதல் வேண்டும் என ஓர் எண்ணம் உதித்தது. தம் தமையனார் வரதுங்கராம பாண்டியரிடமே காட்டத் தீர்மானித்து அங்கு சென்றார்.

வரதுங்கராம பாண்டியரும் நிரம்ப வழங்கிய தேசிகர்பால் அதிவீரராம பாண்டியரோடு கல்வி பயின்று கவியரசராய் விளங்கிய ஓர் சிற்றரசர், ஒழுக்கத்தை உயிரினும் உயர்வாகக் கொண்ட உயர் குணக்குன்றம். அவர்தம் வாழ்க்கைத் துணைவியாயமைந்த தேவியார் கற்பரசி. கல்விக்கடல் அவ்விரு காதலரும் கடவுள் வழிபாட்டையே வாழ்க்கைப் பயனாகக் கொண்டு இறைவனைப் பூசித்தல், இனிய செந்தமிழ்ப் பாக்களால் புகழ்ந்து போற்றல், ஞான நூல்களை ஆராய்தல் முதலிய நற்செயல்களில் தம் காலத்தின் பெரும் பகுதியைச் செலவிட்டு ஞானச்செல்வர்களாய்த் திகழ்ந்தனர்.

பின்னோன் வரைந்த காவியத்தைக் கண்ட வரதுங்கர் மனம் மகிழ்ந்தாராயினும் அதனை வெளியிடாது அடக்கிக்கொண்டு, “தம்பி! உன் மதனி மதிப்புரை கூறும் தகுதி வாய்ந்தவள், அவளிடம் காட்டுக” என்றார். அவ்வாறே கோப்பெருந்தேவியிடம் சென்று சுவடியைக் காட்டினார் அதிவீரராம பாண்டியர். அரசியாரும் அதனை வாங்கிப் படித்தார். மட்டிலாத மகிழ்ச்சி கொண்டார். “தம்பி! ஏன் நூல் முடிக்கப்படவில்லையா?” என வினவினார். “கவிஞர் உலகம் இதனை எவ்வாறு மதிக்கிறது என ஓரளவிற்கேனும் அறிந்துகொண்ட பின்னர், மேலே செல்லுதலே தக்கதோர் செயலாகும் என்று எண்ணி, அவ்வளவோடு நிறுத்தியுள்ளேன்; உங்கள் கருத்தை அறியும் அவாவுடையேன்; கூறுக” என்றார் அதிவீரராம பாண்டியர்.

“தம்பி! உனது நூலின் குணம் குற்றங்களைக் கூறும் திறமை உடையவளோ யான்! கல்வி கற்க விளைவோர் அனைவரும் இலக்கியமாகக் கொண்டு கற்கவேண்டிய பெருமை பெற்றதன்றோ இது! தமயந்தி வர்ணனை வேறு எந்நூலினும் இல்லை என்று எண்ணுமாறு தனிச் சிறப்புற்றுப் பொலிகின்றது. சுருங்கக்கூறின், நன்கு அணி செய்யப்பெற்று, எவர்க்கும் மேலும் காண வேண்டும் என்னும் ஆவலை எழுப்புவதாய், கம்பீரமான நடையோடு வேட்டை மேற் செல்லும் வேட்டைக் குதிரையோடு ஒப்பிடும்படியாக இருக்கிறது இந்நூல்” என இன்சொல் இயம்பினார். அம் மென்மொழிப் பாவையார்.

பிறர் தம்மைப் புகழ்வதைக் கேட்டு மகிழ்ச்சி கொள்ளுதலை விரும்புவது பெரும் பாலோர்க்கு இயல்புதானே? பாண்டிமா தேவியாரின் புகழுரையால் உவகையுற்று அரசியை வணங்கி விடைகொண்டு தமையனாரிடம் சென்று அண்ணியார் நவின்றதை உரைத்தார் அதிவீரராமர்.

வரதுங்கராமர், “தம்பி! உன் அண்ணியாரின் நன்மதிப்பைப் பெற்ற இந்நூலில் குற்றம் காண்போரும் உளரோ? இது யாவரும் ‘பொன்னே போல் போற்றத் தகும் இலக்கியம்’ என்பதில் எட்டுணையும் ஐயமில்லை. எனினும் யான் கூறவிரும்புவது ஒன்று உளது” எனப் பின்வருமாறு உரைத்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"தம்பி, உன் கல்வித் திறமை முழுதும் தோன்றப் புகழ்ந்து பாடியது எவரை? நளனையும் தமயந்தியையும், நம் போன்றவரை சிறப்பித்துப் புகழ்வதில் உனது ஒப்பு உயர்வு அற்ற கல்வியையும் காலத்தையும் செலவழித்திருக்கிறாய் இது தக்கதோ? எண்ணிப் பார். கல்வியின் மேன்மை அதனைக் கற்பதில் இல்லை; அதனைச் செயற்படுத்தும் முறையில் உள்ளது. அரிதில் முயன்று பெற்ற அமுதத்தை ஆற்றில் பெய்து அழித்தல் அடுக்குமோ? இதனால் உருவாகும் பயன் யாது? கற்றோரின் புகழுரையோ? புகழ்வோர் சிலராயின் பொறாமையால் இகழ்வோரும் பலராவரே! இருமை இன்பங்களையும் ஈயவல்ல இறைவனது இணையடிகளைப் புகழ்ந்து பாடித் துதித்தலன்றோ கல்வியின் பயனாவது!

கற்றதனால் ஆய பயன்என்கொல்! வால் அறிவன்
நல்தாள் தொழாஅர் எனின். (திருக்குறள் -2)

என்னும் தமிழ்மறையின் பொன்மொழி அறியாததோ!"

முன்னவர் மொழிந்த மாற்றத்தால் மனமாற்றமுற்ற அதிவீரராமரின் ஊக்கம் குன்றியது. கற்பனை ஊற்றுப்பெருக்குக் குறைந்தது. தொடங்கியதை முடிக்க வேண்டுமே; அதற்காக ஏதோ ஒருவிதமாய் எழுதிமுடித்தார். இந்நிலையில் அண்ணியார் யாது கருத்துக் கொள்ளு கின்றனரோ, காண்போம்" என அந்நூலைப் பாண்டிமாதேவியாரிடம் அனுப்பினார்.

"முதற் பகுதியின் வேகம் பிற்பகுதியில் இல்லை என்பதை அந்த அம்மையார் கண்டார். சென்று தேய்ந்து இறுதல் என்னும் குற்றம் அமையுமாறு இந்நூலின் உணர்ச்சி ஓட்டம் குறைவுபட்டது ஏன்? வேட்டைக் குதிரையின் நடைபோல் இருந்தது. இப்பொழுது வேட்டை நாயின் நடைபோல அன்றோ இருக்கின்றது" என்று எண்ணினார்.

இந்நூல் வேட்டை நாய் போல இருக்கிறது என ஒரு வாக்கியத்தினால் தம் கருத்தைக் குறிப்பிட்டு அனுப்பினார் மைத்துனருக்கு.

"முயல் முதலிய விலங்குகளைப் பிடிக்கச் செல்லுகையில் தாவிப் பாய்ந்து வேகமாக ஓடுவதும், மீளுங்கால் அவ்வேகங் குன்றிச் சோர்வுற்றுத் திரும்பி வருவதும் வேட்டை நாயின் இயல்பு.

கோப்பெருந்தேவியின் இம் மதிப்புரை அவமதிப்புரையாகத் தோன்றியது அரசர் பெருமானுக்கு. வேண்டுமென்றே தம்மை அவமதித்ததாக அவர் நினைத்தார். கோபக்கனல் மூண்டு எழுந்தது. இ∴து இயற்கைதானே! கோபங்கொள்ளாமல் இருத்தல் எப்படி முடியும்? பரிசில் நாடிவரும் பாவாணர்களைப் பரிசோதித்துத் தலையில் குட்டித் துரத்தும் தம்மைப் பிறர் குற்றம் கூறி அவமதிப்பதென்றால் அதிலும் ஓர் பெண்மணி அப்படிச் செய்வதென்றால் எவ்வாறு பொறுப்பது! "நம் தமையன் சாற்றிய அறிவுரைகள் அனைத்தும், அழுக்காற்றால் நூலைப் பிழையுள்ளதாக்கிப் பின் தம் மனைவியைக் கொண்டு அவமதிக்கக் கருதிச் செய்த சூழ்ச்சியே போலும்' என்றும் கொண்டார் அவர். அண்ணன்மேல் பகைமை கொண்டார். பழிதீர்க்க எண்ணிப் போர்க்கோலம் பூண்டார்.

வரதுங்கராமருக்கு தம்பியின் போர்க்கோலச் செய்தி எட்டியது. உடனே அவர் கருவூரை அடைந்து, தம்பியைக் கண்டு, அவரது அறியாமையால் எழுந்த வெகுளியைத் தமது

*உன் கண்கள்தான் உன் உடலுக்கு விளக்கு.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்சொல் மாரியால் அவித்து, நன்மதி புகட்டிச் சென்றார். அதிவீரராம பாண்டியரும் அதுமுதல் தம் தவறான செய்கைக்கு நாணி, கடவுள் அன்புமிக்கவராய், பக்திச்சுவை ததும்ப, கருவைப் பதிற்றுப்பத்தந்தாதி முதலிய பக்தி நூல்களை இயற்றுவதில் மிகுந்த ஆர்வங்கொண்டு புலவர் பெருமானாய் வாழ்ந்துவந்தார்.

காலமானது எவராலும் கடக்கவொண்ணாத வன்மையுடையது. பண்டிதரோ பாமரரோ- பெரியாரோ சிறியாரோ - அரசரோ ஆண்டியோ - நல்லாரோ தீயாரோ எவரையும் அது பொருட்படுத்துவதில்லை. இம்மியும் தவறாமல் தன் காரியத்தைச் செய்தே தீர்க்கும். மனம் ஒருமித்த மாசற்ற வாழ்க்கையால் தூய இன்பம் துய்த்துவந்த வரதுங்கராமரையும் அவர் மனைவியாரையும் பிரித்துவிட எண்ணியது அது. அரசருக்கு முடிவை உண்டாக்கியது. அரசியார் அவரது திருமுகத்தை நோக்கியவண்ணம் அருகில் அமர்ந்திருந்தார். கணவரது அன்பு முகத்தில் அச்சக்குறி தோன்றியதாகக் கண்டார். அரசியார், "மரண காலத் தோற்றங்களாகச் சொல்லப்படும் பயங்கரத் தோற்றங்கள் இவருக்கு அச்சம் விளைவிக்கின்றனவோ?" என்று ஐயுறவு கொண்டவராய், "ஏன், அஞ்சுகின்றீரோ?" என வினவினார். பாண்டிய மன்னர் நகைத்தார். "தேவி! யான் எதற்கு அஞ்ச வேண்டும்?" இரவும் பகலும் இடையறாது நான் தொழுது துதிக்கும் பெருமான் என் உள்ளக்கோயிலில் எழுந்தருளிக் காட்சியளித்துக்கொண்டிருக்கையில் பயம் ஏன் உண்டாகும் எனக்கு!" எனத் தாம் காணும் சிவபெருமானது திருவுருவக் காட்சியை விளக்கிக் கூறினார்.

உயிர்களுக்கும் பிறப்பீனும் வித்தாக இருப்பது அவாவே என்பதும், கொள்ளும் அவாவுக்கு ஏற்றவாறே மரண காலத்தில் அவ்வுயிர்கள் மறுபிறப்படைந்து துன்புறும் என்பதும் மறுபிறவி நம்பிக்கையாளர் கொள்கை. பிறவித் துன்பத்திற்கு அஞ்சும் பெரியோர் உலகப் பொருள்களில் அவாவற்றுக் கடவுள் நினைப்போடு மரணமடைய விரும்புவர். வாழ்நாளின் பெரும் பகுதியில் கடவுளை பேரன்போடு தியானித்துப் பழகினோர்க்கே அந்நிலை கைகூடும். உலகப் பொருட்களில் பற்றுக்கொண்டு உழல்வோர்க்கு அது சாத்தியமாவதன்று. மனம் எப்பொருளில் அதிக ஆசை வைத்துப் பழகியிருக்கிறதோ, அப்பொருளையே உயிர் நீக்கத்தின் போதும் கொண்டு நிற்பதே அதன் இயல்பு.

வரதுங்கராம பாண்டியரும் அவர்தம் அன்பின் உருவாய தேவியாரும் கல்விச் செல்வம், பொருட் செல்வங்களோடு பக்தி ஞானச் செல்வங்களும் பூரணமாகப் பெற்றிருந்தவர்கள். வழிபாட்டுப் பயிற்சியின் முதிர்ச்சியால் தம் உபாசனாமூர்த்தியின் திருவுருவை மரண காலத்தில் தம் மனக்கண்ணால் கண்டுகளிக்கும் பெரும்பேறு வரதுங்கராம பாண்டியருக்கு எளிதில் உளதாயிற்று. தாம் கண்ட சிவபெருமான் திருக்கோலக் காட்சியை அரசியார்க்கு அவர் வரைந்து காட்டிய கவிச் சித்திர ஓவியம், தன்னைக் காண்பாரது உள்ளக் கிழியிலும் பதிந்து காட்சியளிப்பதை ஊன்றி நோக்குங்கள். அந்த ஓவியம் இதுவே.

அஞ்சல் என்ற கருதலமும், கணபண கங்கணமும்,
அரைக்கிசைத்த புலி உடையும், அம்புலிச் செஞ்சடையும்
கஞ்ச மலர்ச் சேவடியும், களை கழலும் சிலம்பும்,
கருணை மொழி திருமுகமும், கண்கள் ஒருமூன்றும்

*கிடைக்காத ஒன்றுக்காய் கவலைப்படாதே.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நஞ்சைஉண்ட மணிமிடறும், முந்நூலும், மார்பும்
நலந்திகழ் வெண்ணீற்றொளியும், மறிமானும், மழுவும்
பஞ்சடி சிற்றிடை உமையாள் ஒப்பனை பாகமுமாய்ப்
பால்வண்ணர் உளத்திருக்கப் பயமுண்டோ எனக்கே?”

(கணபணம் - கூட்டமாகிய பாம்பு)

இது உருவத் தியானம். இதனினும் சிறந்ததாக பிறிதொரு நிலை உளது. அதனை அருவத்தியானம் என்பர். வாக்கு மனம் கடந்ததாய் குணம் குறிகள் இன்றி, ஞானப் பெருவெளியாய் விளங்கும் பரம்பொருளின் உண்மைநிலையை உளத்திருத்தி, அதனோடு ஒன்றுபட்டு நிற்கும் நிலையே அருவத்தியான நிலை என ஞான நூல்கள் கூறுகின்றன. உருவத்தியானத்தின் முடிவான அந்த நிலையை எய்தினார் பிறவிப் பெருங்கடல் கடப்பர்.

அந்த மேலான நிலையை மன்னர்பிரானுக்கு நினைவுறுத்தக் கருதினார் தேவியார். அவரை உற்றுநோக்கிச் செவிப் புலனாமாறு இன்னிசையோடு அப் பரம்பொருளின் நிலையை ஓர் பாடலால் மொழிந்தார்.

யாக்கையெனும் புழுக்குரம்பை அணைந்தணையாப் பொருளை
அருளொளியை, பராபரத்துக்கு அப்புறமாம் அறிவை,
நீக்கமற மயிர்முளைக்கும் இடமற எங்கெங்கும்
நிறைந்து நின்ற முழுமுதலை நினைவில் எழும் சுடரை
பாக்கியங்கள் செய்து அனந்தம் தவக்குறைகள் முடிக்கும்
பழவடியார் தமக்குதவும் பசுந்துணர்க் கற்பகத்தை
வாக்குமன விகற்பத்தால் அளவுபடா ஒன்றை,
மாசற்ற வெறுவெளியை, மனவெளியில் அடைப்பாம்.

இதுவே இந்த ஞானப் பாடல்.

அவ்வளவில் அரசர் அவ்வுயிர் நிலையினின்று பேரின்பப் பெருவாழ்வு எய்தினார். இம்மையில் மாத்திரமின்றி மறுமை இன்பத்துக்கும் தம் கொழுநர்க்கு உறுதுணையாக இருந்து உதவிய அவ்வுத்தமப் பெண்ணரசியின் மாண்புதான் என்னே!

“புணர்ந்தன பிரியும்; பிறந்தன இறக்கும்; இது மாற்ற முடியாத இயற்கையின் நியதி. அன்றியும் ஆன்மா அழிவற்றது. அதற்குப் பிறப்பும் இல்லை; இறப்பும் இல்லை என அறிவு நூல்கள் கூறும் உண்மையை உணர்ந்த ஞானச் செல்வியாகிய அரசியார் தம் கணவர் மாண்டாரெனக் கொண்டு மனம் மாழ்குவரோ!

காவலர் பிரிவுக்குப் பின்னர் அவ்வம்மையார் தம் இறுதிநாள் வரை சச்சிதானந்தத் தனிப்பொருளை வழிபடும் ஞான நெறியில் தம் மனதை இடையறாது செலுத்துவதாகிய ஞானப் பெருவாழ்வை மேற்கொண்டு ஒழுகுவாராயினர்.

முற்காலத்தில் தமிழ்நாட்டில் எத்துணைச் சிறப்பு வாய்ந்து யாவராலும் புகழ்படத்தக்க உயர் நிலையுற்று விளங்கினார் என்பதற்கு வரதுங்கராம பாண்டியரின் மனைவியாரது இவ்வரலாற்றிலும் வேறு சான்று வேண்டுமோ!

(தொடரும்...

*துக்கத்தை மறக்கச் செயலில் ஈடுபட வேண்டும்.*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கார்த்திகை மாத வாராந்த நிகழ்வுகள்

03.11.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"கலைநிகழ்வு"

வழங்குபவர்கள் :- காரைநகர் கிழவன்காடு

கலாமன்ற மாணவர்கள்

---

10.11.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

"இன்னிசை"

(பக்கவாத்திய சகிதம்)

---

17.11.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

சொற்பொழிவு :- "மகாபாரதம்" **(தொடர்)**

வழங்குபவர் :- செஞ்சொற் செல்வன் இரா. செல்வவடிவேல் அவர்கள்

[ஆசிரியர்]

---

24.11.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணியளவில்

## ஞானச்சுடர் கார்த்திகை மாத வெளியீடு

வெளியீட்டுரை :- திரு ச. நவரத்தினராசவேல் அவர்கள்

மதிப்பீட்டுரை :- திரு செ. பரமேஸ்வரன் அவர்கள்

[அதிபர்]

**311ஆவது மலர்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பதிவு இல: DOP/NEWS/103/2023

# ஸ்ரீ செல்வச்சந்நிதி ஆலய முகப்புத் தோற்றம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org